# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 17.05.2022 supeedsam.com supeedsam@gmail.com







# உயிரை பணயம் வைத்து இந்த சவாலுக்கு நான் முகம் கொடுப்பேன்

## புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கு ஆற்றிய விசேட உரை



கடந்த வியாழக்கிழமை நான் பிரதமர் பதவியை பொறுப்பேற்றேன்.அந்தப் பதவியை நான் கேட்கவில்லை. நாட்டில் ஏற்பட்டிருந்த நெருக்கடி நிலையை கருத்தில் கொண்டு இந்தப் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு ஜனாதிபதி எனக்கு அழைப்பு விடுத்தார்.

நான் அரசியல் தலைவராக மட்டுமின்றி இலவசக் கல்வியை அனுபவித்து கொழும்பு சட்டக் கல்லூரியில் சட்டத்துறையில் பட்டம் பெற்று உயர்ந்த தேசியத் தலைவர் என்ற வகையிலே இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன்.

02 ஆம் பக்கத்தில்...

## பிரதமரிடம் இருந்து நிவாரண வரவு செலவு திட்டம்!

2020-2022 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி வரவு செலவுத் திட்டத்திற்கு பதிலாக நிவாரண வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்நாட்டு பொருளாத நிலைமை தொடர்பில் பொதுமக்களுக்கு

02 ஆம் பக்கத்தில்...

## புதிய அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்க ஐ.ம.ச ஏகமனதாக தீர்மானம்

(தர்மா)



புதிய அரசாங்கத்தின் நற்செயல்களுக்காக பதவிகளை ஏற்காமல் பூரண ஆதரவை வழங்க ஐக்கிய மக்கள் சக்தி ஏகமனதாக தீர்மானித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு கூட்டத்தில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அக்கட்சியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க தற்போதைய

02 ஆம் பக்கத்தில்...

## தமிழர்களுக்கான தீர்வை வென்றெடுக்க புதிய பிரதமருடன் பேசுவோம்

(பிரகாஷ்)

தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற்றுக்கொள்ளும் வகையில் புதிய பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் புதிய அரசாங்கம் முன்னெடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பூரண ஆதரவினை வழங்குவது என்பது இதன் அர்த்தம் கிடையாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் நலனுக்காகவும் அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினை வழங்கும் வகையிலும் அரசாங்கம் முன்வைக்கப்படும் திட்டங்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவினை வழங்கும் என இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

ரணில் விக்ரமசிங்க முன்பு பிரதமராக இருந்தபோதும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து அவருடன் நீண்ட கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளமையினால் அவர் வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சினைகள்

02 ஆம் பக்கத்தில்...



## ஜோன்ஸ்டன் உட்பட 22 பேரை கைது செய்யுமாறு சட்டமா அதிபர் பணிப்பு



ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, சனத் நிஷாந்த, சஞ்சீவ எதிரிமான்ன, மிலன் ஜயதிலக்க மற்றும் சமன் லால் பெர்னாண்டோ உட்பட 22 ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன செயற்பாட்டாளர்கள் மற்றும் உறுப்பினர்களை கைது செய்யுமாறு சட்டமா அதிபர், பொலிஸ்மா

02 ஆம் பக்கத்தில்...

## பிரதமருக்கு ஆதரவு வழங்க சுயாதீன 10 கட்சிகள் இணக்கம்



(காந்தன்)

உத்தேச அனைத்துக் கட்சித் தலைவர்களின் தேசிய சபை மற்றும் உத்தேச பாராளுமன்றக் குழுக்களில் இணைந்து அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதற்கு

02 ஆம் பக்கத்தில்...

## எதிர்க்கட்சித் தலைவராக மஹிந்த? ராஜித வெளியிட்ட தகவல்!

(காந்தன்)

பிரதமர் ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளுடன் பகிரங்கமாக கலந்துரையாடி உரிய உடன்படிக்கைக்கு அமைய அமைச்சரவையை

02 ஆம் பக்கத்தில்...



## நாட்டில் மீண்டும் மின்வெட்டு!

இன்றைய தினம் (17) நாடளாவிய ரீதியில் 3 மணித்தியாலங்கள் 40 நிமிடங்களுக்கு மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

02 ஆம் பக்கத்தில்...






## கொழும்பு போலிஸ் தலைமையகத்திற்கு முன்பாக போராட்டம்



சோசலிச இளைஞர் சங்கத்தினால் பொலிஸ் தலைமையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 09 ஆம் திகதி காலிமுகத்திடலில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்களுக்கு பின்னணியில் உள்ளவர்களை கைது

02 ஆம் பக்கத்தில்...







## கொழும்பு பொலிஸ் தலைமையகத்திற்கு

செய்து சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இதன் காரணமாக கொழும்பு பொலிஸ் தலைமையகத்திற்கு முன்பாக பதற்றநிலை ஏற்பட்டுள்ளதாக தெரியவந்தது.

## நாட்டில் மீண்டும் மின்வெட்டு!

அதன்படி, A, B, C, D, E, F, G, H, I, J, K, L, P, Q, R, S, T, U, V மற்றும் ஙி வலயங்களுக்கு காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மின்சாரம் இரண்டு மணி நேரமும், மாலை 5 மணி முதல் இரவு 10 மணி வரை ஒரு மணி நேரம் 40 நிமிடங்களும் மின் வெட்டு அமுல்ப்படுத்தப்படும்.

மேலும் M, N, O, X, Y மற்றும் Z ஆகிய வலயங்களுக்கு மாலை 5 மணி முதல் 8 மணி வரை மூன்று மணி நேரம் மின் வெட்டு அமுலில் இருக்கும்.

அதேபோல், கொழும்பு நகர எல்லைக்குள் காலை 6 மணி முதல் 9 மணி வரை 3 மணி நேரம் மின் வெட்டு அமுல்ப்படுத்துப்படவுள்ளது.

## தமிழர்களுக்கான தீர்வை வென்றெடுக்க

தொடர்பில் நன்கு அறிந்திருப்பர் என்றும் கூறியுள்ளார்.

மேலும் வடக்கு கிழக்கு மக்கள் எதிர்பார்க்கும் அதிகாரப் பகிர்வு என்கின்ற விடயம் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஊடாக இலகுவாக முன்னெடுக்க முடியும் என்றும் இரா.சம்பந்தன் நம்பிக்கை வெளியிட்டார்.

எனவே பலமான அரசாங்கம் ஒன்று கட்டியெழுப்பப்பட்ட பின்னர் அவருடன் தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடல்களை நடத்தி தீர்வினை காண்போம் என்றும் இரா.சம்பந்தன் குறிப்பிட்டார்.

## ஜோன்ஸ்டன் உட்பட 22 பேரை கைது செய்யுமாறு

அதிபர் மற்றும் குற்றப் புலனாய்வு பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

கோட்டா கோ கம மற்றும் மைனா கோ கமவில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் மீது கடந்த 9ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதல் குறித்தே மேற்குறிப்பிட்டோரை கைது செய்யுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

## எதிர்க்கட்சித் தலைவராக மஹிந்த?

உருவாக்கினால் மக்கள் அமைச்சரவையை ஏற்றுக்கொள்வார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர், இதுவரை கட்சிகளை அமைச்சரவையில் இணையுமாறு ரணில் அழைக்கவில்லை என்றாலும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தனித்தனியாக இரகசிய கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளார் என தெரிவித்துள்ளார்.

கட்சிகளுடன் சம்பிரதாயமான வெளிப்படையான கலந்துரையாடலுக்குப் பின்னர் முறையான உடன்படிக்கைக்கு அமைவாக அமைச்சரவை அமைக்கப்பட்டால்தான் அனைவரும் அதனை ஏற்றுக்கொள்வர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இப்போதும் அரசியல் கட்சிகளுடன் வெளிப்படையான உரையாடல்களை நடத்த முடியும் என்றும் சரியான அரசாங்கத்தை அமைக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்படவுள்ளதாக வெளியான தகவல்களுக்கு பதிலளித்த ராஜித சேனாரத்ன, இந்த நடவடிக்கையும் சதித்திட்டத்தின் ஒரு அங்கமே என தெரிவித்துள்ளார்.

மேலும் சஜித் பிரேமதாசவிற்கு பிரதமர் பதவி வழங்கப்பட்டபோது அதை ஏற்க தாமதமாகிவிட்டார் என்ற குற்றச்சாட்டு தவறானது என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும் இடையிலான புரிந்துணர்வு இரண்டு வாரங்களுக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டது' என்றும் அவர் கூறியுள்ளார்.

## பிரதமரிடம் இருந்து நிவாரண வரவு செலவு திட்டம்!

விசேட உரையாற்றி பிரதமர் இதனை தெரிவித்துள்ளார். '2020 -2022 ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தி வரவு செலவு திட்டத்திற்கு பதிலாக புதிய வரவு செலவு திட்டத்தை தாக்கல் செய்ய திட்டமிட்டுள்ளேன். அதை நிவாரண வரவு செலவு திட்டமாக வழங்குவதே எனது திட்டம்.'

## பிரதமருக்கு ஆதரவு வழங்க சுயாதீன 10 கட்சிகள் இணக்கம்

பத்து கட்சிகளின் பிரதிநிதிகள் இன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர்.

பிரதமர் அலுவலகத்தில் நேற்று (16) காலை இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில இதனை தெரிவித்தார்.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்த அழைப்பின்படி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்தில் இருந்து விலகிய 10 சுயாதீன அரசியல் கட்சி உறுப்பினர்களும் அதற்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

எனினும் புதிய அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை ஏற்க 10 கட்சிகளும் மறுப்பு தெரிவித்துள்ளதாக உதய கம்மன்பில மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இன்று காலை பிரதமருடன் மற்றுமொரு கலந்துரையாடலில் ஈடுபட்டது. பிரதமரின் அழைப்பின் பேரில் சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு ஆதரவளிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இதன்போது தீர்மானித்துள்ளது.

இந்த சந்திப்பில் தயாசிறி ஜயசேகர, ஷான் விஜயலால் டி சில்வா, ரஞ்சித் சியம்பலாபிட்டிய, துஷ்மந்த மித்ரபால ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

## புதிய அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்க ஐ.ம.ச

அரசாங்கத்தினால் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக மேற்கொள்ளப்படும் சிறப்பான வேலைத்திட்டங்களுக்கு ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவளிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களைச் கவர்ந்திழுக்க, கட்சியின் அடிப்படைக் கொள்கைக்குப் புறம்பாக ஆளும் கட்சிக்கு உறுப்பினர்களை உள்வாங்க முற்பட்டால் அதற்குரிய ஆதரவை இடைநிறுத்துவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு தீர்மானித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## உயிரை பணயம் வைத்து இந்த சவாலுக்கு நான் முகம் கொடுப்பேன்

இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கையின் பொருளாதாரம் மிகவும் மோசமான நிலையிலேயே உள்ளது.2022 ஆரம்பத்தில் கடந்த அரசாங்கத்தின் வரவுசெலவு திட்டத்தில் 2.3 ட்ரில்லியன் ரூபாய்கள் வருமானமாக உள்ளன என காட்டப்பட்டாலும் இந்த வருடத்திற்கான உண்மையான வருமான எதிர்வு கூறல் 1.6 ட்ரில்லியன் ரூபாய்களாகவே உள்ளன.

2022 ஆம் ஆண்டிற்கான அரசின் செலவு 3.3 ட்ரில்லியன் ரூபாய்கள். எவ்வாறாயினும் கடந்த அரசில் வட்டி விகிதம் அதிகரித்தமை மற்றும் மேலதிக செலவுகள் காரணமாக 2022 ஆம் ஆண்டிற்கான அரசின் மொத்த செலவு 4 ட்ரில்லியன் ரூபாய்களாகும். வருடத்திற்கான வரவுசெலவு பற்றாக்குறை 2.4 ட்ரில்லியன் ரூபாய்களாக உள்ள அதேவேளை அது சராசரி தேசிய உற்பத்தியில் நூற்றுக்கு 13 வீதமாகும் .

அதே போன்று அங்கீகரிக்கப்பட்ட கடன் எல்லை 3200 பில்லியன் ரூபாயாகும். நாம், மே மாதத்தின் இரண்டாம் வாரம் ஆகும்போது 1950 மில்லியன் ரூபாய்களை செலவு செய்திருந்தோம். அதன்படி அண்ணளவான மிகுதி 1250 மில்லியன் ரூபாய்கள். நாம் நேற்று அமைச்சரவையில் திறைசேரி முறிகளை வழங்கும் அனுமதிக்கப்பட்ட எல்லையை 3000 பில்லியனில் இருந்து 4000 பில்லியன் வரை அதிகரிக்கும் யோசனை ஒன்றை பாராளுமன்றத்தில் முன்வைக்க ஒரு தீர்மானத்தை எடுத்தோம்.

2019 நவம்பர் மாதத்தில் எமது அந்நியச் செலாவணி கையிருப்பு %.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் இருந்தன. ஆனால் இன்று திறைசேரியால் ஒரு மில்லியன் டொலர்களைக்கூட தேடிக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எரிவாயுவை கப்பலில் ஏற்றும் பொருட்டு செலுத்தத் தேவையான 5 மில்லியன் அமெரிக்க டொலர்களைக்கூட இந்த நேரத்தில் நிதியமைச்சினால் தேடிக்கொடுக்க முடியாதுள்ளது.

இவ்வனைத்து நெருக்கடிகளுக்கு மத்தியில் நாம் முகம் கொடுக்கும் மிகமோசமான சில சிக்கல்கள் உள்ளன. எதிர்வரும் சிலநாட்களில் வரிசைகளை கட்டுப்படுத்தும் பொருட்டு மிகவிரைவில் சுமார் %5 மில்லியன் அமெரிக்க டொலர்களை தேடவேண்டிய உள்ளது. இப்போது நமது கையிருப்பில் ஒரு நாளைக்குத் தேவையான பெற்றோல் மட்டுமே உள்ளது.

நேற்று முன்தினம் வந்த டீசல் கப்பலால் இன்றில் இருந்து உங்களின் டீசல் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வு கிடைக்கும். இந்திய கடனுதவி திட்டத்தின் கீழ் மே 19 மற்றும் ஜுன் 01 ஆகிய திகதிகளில் மேலும் இரண்டு டீசல் கப்பல்களும் மே 18 மற்றும் மே 29 இரண்டு பெற்றோல் கப்பல்கள் வரவுள்ளன.

இன்றுவரை 40 நாட்களுக்கு மேலாக இலங்கையின் கடற்பரப்பில் பெற்றோல், மசகெண்ணெய் , எண்ணெய் ஏற்றிவந்த கப்பல்கள் 3 நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு செலுத்தும் பொருட்டு திறந்த சந்தையில் டொலர்களை பெற்றுக் கொள்ள நடவடிகை எடுக்கப்படும்.

மின்சாரத் தேவையில் நான்கில் ஒன்றை உற்பத்தி செய்ய எரிபொருளே பயன்படுத்தப்படுகிறது. இதனால் நாளாந்த மின்வெட்டு இன்னும் சில நாட்களில் 15 மணித்தியாலங்களாக மாறவும் இடமுண்டு.

ஆனால் நாம் இதற்கு தேவையான நிதியை தேடிக்கொண்டுள்ளோம் . அதேப் போன்று முடிந்தளவு நுகர்வோருக்கு எரிவாயுவை பெற்றுக் கொடுக்கும் பொருட்டு 20 மில்லியன் அமெரிக்க டொலர்களை கூடிய விரைவில் தேடவேண்டும். மண்ணெண்ணெய் மற்றும் சம்பந்தமான நிலைமை இதனை விடப் பயங்கரமானது.

இந்த நேரம் வரை இலங்கை மத்திய வங்கி, அரச வங்கிகள், தனியார் வங்கிகள் , இலங்கையில் உள்ள வெளிநாட்டு வங்கிகள் அனைத்தும் டொலர் இல்லாத சிக்கலுக்கு முகம் கொடுத்துள்ளன. நம்மிடம் கையிருப்பில் உள்ள டொலர்களின் அளவு மிகவும் சிறியது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் இவ்வனைத்து சிரமங்களுக்கு மத்தியில் நேற்று முன்தினம் ஒரு டீசல் ஏற்றிய கப்பலை நேற்று கொண்டு வந்தோம். அதனால் இன்று முதல் அந்த டீசலை உங்களால் பெற்றுக் கொள்ள முடியும். அதன்பொருட்டு இந்தியாவின் ஒத்துழைப்பு நமக்கு கிடைத்தது.

அதேபோன்று வந்துள்ள எரிவாயு கப்பலுக்கான கட்டணத்தை செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் செலுத்த நாம் நடவடிக்கை எடுப்போம். அதன் மூலம் உங்களின் எரிவாயு பிரச்சனைகளுக்கு ஏதோவொரு தீர்வு கிடைக்கும்.

இதற்கு இடையில் , மற்றுமொரு உதாரணம் மருத்துவ மருந்துகளுக்கானத் தட்டுப்பாடு. இருதய நோயாளிகளுக்குத் தேவையான மருந்துகள், சத்திர சிகிச்சைக்குத் தேவையான சிகிச்சை உபகரணங்கள் உட்பட பல மருத்துவ மருந்து வகைகளுக்கான தட்டுப்பாடு நிலவுகிறது.

மருத்துவ மருந்துகள், சத்திர சிகிச்சை உபகரணங்கள் மற்றும் தேவையான உணவுகளை வழங்கும் வழங்குநர்களுக்கு 04 மாதங்களாக கட்டணம் செலுத்தப்படவில்லை. அவர்களுக்கு வழங்கவேண்டிய நிலுவை தொகை 34 பில்லியன் ரூபாய்களாகும்.

அதே போன்று அரச ஔடதக் கூட்டுத்தாபனம் இறக்குமதி செய்த மருத்துவ மருந்துகளுக்கு 04 மாதங்களாக கட்டணம் செலுத்தப்படவில்லை. அதனால் அவர்களை கருப்புப் பட்டியலில் சேர்க்க வெளிநாட்டு மருத்துவ நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. 14 அத்தியாவசிய மருத்துவ மருந்துகள் தட்டுப்பாடாக உள்ளமையும், அதில் இரண்டையாவது வழங்க இந்த நேரத்தில் எமது மருத்துவ வழங்கள் பிரிவிற்கு இயலாது உள்ளமை மிகவும் வருந்தத்தக்க விடயமாக உள்ளது.

இருதய நோய்களுக்கு பயன்படுத்தப்படும் மருந்து, மற்றும் விசர் நாய்க்கடி எதிர்ப்பு மருந்து ஆகியவையே அந்த இரண்டு மருந்துகளாகும். ஆனால் விசர் நாய்க்கடி எதிர்ப்பு மருந்திற்க்கு மாற்று மருந்து எதுவும் இல்லை.

இதற்கிடையில் 2022 ஆண்டிற்காக முன்வைக்கப்பட்ட அபிவிருத்தி வரவுசெலவு திட்டத்திற்கு பதிலாக புதிய வரவுசெலவு திட்டமொன்றை முன்வைக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதனை சலுகை வரவுசெலவு திட்டமாக முன்வைக்கவே நான் திட்டமிடுகிறேன். அதேபோல், இதுவரை நட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் ஸ்ரீலங்கன் விமான சேவையை தனியார் மயப்படுத்துமாறு நான் முன்மொழிகின்றேன்.

2020 - 2021 ல் மட்டும் ஸ்ரீலங்கன் விமான சேவை 45 பில்லியன் ரூபாய்கள் நட்டமடைந்துள்ளது .2021 மார்ச் 31 ஆகும் போது இதன் மொத்த நட்டம் 3%2 பில்லியன்களாக இருந்தது. நாம் இதனை தனியார் மயப்படுத்தினாலும் இந்த நட்டத்தை நாமே ஏற்க நேரிடும்.

இந்த நட்டத்தை வாழ்கையில் ஒருமுறையாவது விமானத்தில் பயணிக்காத இந்த நாட்டின் ஏழை எளிய மக்களும் அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

குறுகிய காலத்திற்கு நாம் இதனை விட மோசமான காலத்திற்கு முகம் கொடுக்க ப் போகின்றோம். பணவீக்கம் மேலும் அதிகரிக்க இடமுள்ளது.

அரசாங்கம் தற்போது 92 பெற்றோல் லீட்டர் ஒன்றில் ரூ. 84.38 , 95 பெற்றோல் லீட்டர் ஒன்றில் ரூ. %1.19 , டீசல் லீட்டர் ஒன்றில்ரூ. 131.55 சுப்பன் டீசல் லீட்டர் ஒன்றில் ரூ. 136.31 மற்றும் மண்ணெண்ணெய் லீட்டர் ஒன்றில் ரூ. 294.50 என நட்டமடைகின்றது .பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் இந்த நட்டத்தை மேலும் தாங்கிக் கொள்ள முடியாது. அதேப்போல இலங்கை மின்சாரசபை மின் அலகு ஒன்றிற்காக உங்களிடம் ரூ. 1% ஐ அறவிட்டாலும் அதன் பொருட்டு 48 ரூபாய்கள் வரை செலவு செய்கிறது . அதன்படி ஒரு அலகிற்கு 30 ரூபாய்கள் நட்டம் ஏற்படுகிறது. அதுவும் மோசமான சிக்கலாகும்.

நான் இந்த நேரத்தில் விருப்பப்படா விட்டாலும் பணத்தை அச்சடிப்பதற்கு அனுமதி வழங்க நேரிடும். அரச ஊழியர்களின் இந்த மாத சம்பளத்தை வழங்கவும் , உங்களுக்கு தேவையான பொருட்கள் சேவைகளின் பொருட்டே அதனை செய்யவுள்ளது. எவ்வாறாயினும் பணத்தை அச்சடிப்பதால் ரூபாவின் பெறுமதி குறையும் என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும்.

தற்போதைய நிலையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் மின்சாரசபைக்குத் தேவையான நிதியைக்கூட தேடமுடியாதுள்ளது. எவ்வாறாயினும் எதிர்வரும் சில மாதங்களுக்கு நீங்களும் நானும் வாழ்க்கையில் மோசமான காலக்கட்டத்தை கடக்க நேரிடும். அதற்கு நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் முகம் கொடுக்க வேண்டும்.

நான் மக்களுக்கு விடயங்களை மறைத்து பொய் சொல்வதற்கு எந்தவகையிலும் விரும்பவில்லை. பயங்கரமாக இருந்தாலும் அசிங்கமாக இருந்தாலும் இதுதான் உண்மையான நிலைமை.

குறுகிய காலத்திற்கு நாம் கடந்த காலத்தைவிட மிகவும் கஸ்டமான காலத்திற்கு முகம் கொடுக்க போகின்றோம். இந்த நேரத்தில் நமக்கு கவலைப்பட மட்டுமே முடியும். ஆனால் இது குறுகிய காலத்திற்கு மட்டுமே.

எதிர்வரும் சில மாதங்களில் எமது நட்பு நாடுகளின் உதவிகள் மற்றும் ஒத்துழைப்பு எமக்கு கிடைக்கும். அவர்கள் எமக்கு உதவி செய்வதாக உறுதியளித்துள்ளனர். அதன் பொருட்டு எதிர்வரும் சில மாதங்கள் நாம் பொறுமையுடன் இருக்க வேண்டும். ஆனால் இதில் இருந்து நாம் மீள முடியும். அதன்பொருட்டு நாம் புதிய வழிக்கு செல்ல நேரிடும்.

இந்த சந்தர்ப்பத்தில் தற்போதைய நிலைமை சம்பந்தமாக எதிர்கட்சி தலைவர் உட்பட கட்சித் தலைவர்களுக்கு அனுப்பிய கடிதங்களுக்கு பதிலளித்தமை குறித்து அவர்களுக்கு நன்றி கூறுகிறேன்.

தற்போது நிலவும் இந்த சிக்கல்களுக்கு தீர்வு காணும் பொருட்டு தேசிய சபை அல்லது அரசியல் சபை ஒன்றை அனைத்து கட்சிகளினதும் பங்கேற்புடன் உடனடியாக அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டி உள்ளது.

அதன் மூலம் அனைத்து தரப்பினருடனும் கலந்தாலோசித்து எட்டப்படும் தீர்மானத்திற்கு அமைய நிச்சயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பொதுவான குறுகிய கால– மத்தியக் கால – மற்றும் நீண்ட கால செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி நாட்டை மீண்டும் உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்ல எம்மால் முடியும்.

மண்ணெண்ணெய், எரிவாயு, எரிபொருள் வரிசை இல்லாத நாடு, மின்சாரம் துண்டிக்கப்படாத நாடு , விவசாயத்தை சுதந்திரமாக மேற்கொள்ளக் கூடிய வசதிகள் உள்ள நாடு , இளைஞர் யுவதிகளின் நாளையதினம் பாதுகாக்கப்பட்ட நாடு, மனித வளம் போராட்டக் களத்தில் மற்றும் வரிசையில் வீணடிக்கத் தேவை இல்லாத நாடு, எல்லோரும் சுதந்திரமாக வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்லக் கூடிய நாடு , மற்றும் மூன்று வேளையும் உணவு உண்ணக் கூடிய நாட்டை நாம் கட்டியெழுப்புவோம்.

நான் பொறுப்பேற்றது மிகவும் அபாயகரமான சவால். கத்தியின் மேல் நடப்பதைவிட இது பயங்கரமான சவால் மிகுந்தது. மிகவும் ஆழமானது. அடியே தெரியவில்லை. பாலங்கள் மெல்லிய கண்ணாடியால் அமைக்கப்பட்டுள்ளன. கைப்பிடி இல்லை. என்னுடைய கால்களில் கலற்ற முடியாத பாதணிகள் போடப்பட்டுள்ளன. அதன் அடியில் கூர்மையான இரும்பு ஆணிகள் பொருத்தப்பட்டுள்ளன. குழந்தையை பாதுகாப்பாக அடுத்த பக்கம் கொண்டு செல்ல வேண்டி உள்ளது. இந்த சவாலை நான் நாட்டிற்காகவே பொறுப்பேற்றேன்.

எனது நோக்கமும் அர்ப்பணிப்பும் ஒரு தனிமனிதன் , ஒரு குடும்பம், அல்லது ஒரு கூட்டத்தை பாதுகாப்பது அல்ல முழு நாட்டினதும் மக்களை காப்பாற்றுதே, இளைஞர்களின் எதிர்காலத்தை காப்பாற்றுவதே .உயிரை பணயம் வைத்து இந்த சவாலுக்கு நான் முகம் கொடுப்பேன். அந்த சவாலை வெற்றி கொள்வேன். அதற்கு உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பையும் எனக்கு பெற்றுத் தாருங்கள்.

நான் எனது கடமையை நாட்டிற்காக செய்து முடிப்பேன். அது நான் உங்களுக்கு அளிக்கும் உறுதியாகும் என்றார் .

இலங்கை தினசரி மற்றும் வாரந்த பத்திரிகைகளை உங்கள் மொபைலில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்

Viber இல் இணைய இங்கே CLICK செய்யுங்கள்




இக் குழுமத்தில் இணைவதனால் மற்றவர்கள் உங்கள் தொலைபேசி இலக்கத்தை பார்வையிட முடியாது






# விடுதலை தேடி முள்ளிவாய்க்கால் நோக்கிய பயணம்










(மட்டு. துஷாரா )

முள்ளிவாய்க்கால் மண்ணில் இன்னும் இரத்த வாடை வீசிக்கொண்டு இருக்கின்றது. அந்த மண்ணில் கால் வைத்துப்பாருங்கள் உங்களுக்குத் தாமாகவே ஓர் உணர்வு வரும், நன்றாக காதுகொடுத்து கேட்டால் அந்த மண்ணில் மடிந்த ஒவ்வொரு உயிரின் ஒலியும் அவர்களின் அவலக்குரல்களும் கேட்டுக் கொண்டே இருக்கின்றதென வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின்சங்கத்தின் அம்பாறை மாவட்டத் தலைவி தங்கராசா செல்வராணி தெரிவித்தார்.

பொத்துவில் இருந்து முள்ளிவாய்க்கால் வரையிலான பயணத்தின் மே 18 இன விடுதலை தேடி முள்ளிவாய்க்கால் நோக்கிய பயணம் நேற்று முன்தினம் (15) மாலை களுவாஞ்சிக்குடியை வந்தடைந்தது. இதன் போது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முள்ளிவாய்க்கால் மண்ணில் உப்பில்லாத கஞ்சிக் கோப்பையுடன் உயிர்வாழ வேண்டும் என இருந்த 1 இலட்சத்தி 6% ஆயிரத்துக்கு மேற்பட்ட எமது மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். இன்றுடன் படுகொலை செய்யப்பட்டு 13 வருடங்களை எட்டி நிற்கின்றது. இக்காலத்தை நாம் முள்ளிவாய்க்கால் படுகொலை நட்களாக அனுஷ்ஸ்ட்டித்துக் கொண்டிருக்கின்றோம். கடந்த 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட எமது அனுஸ்ட்டிப்புப் பயணம் எதிர்வரும் 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் முன்றலில் பொதுச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தி முடித்துக் கொள்ளவுள்ளோம்.

எங்களது நடை பயணத்தில் பங்கேற்றிருப்பவர்களுடன் பொதுமக்கள், பொது அமைப்புக்ளின் பிரதிநிதிகள், மக்கள் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள், ஊடகவியலாளர்கள் அனைவரும் ஒறிணைய வேண்டும் எனவும் அவர் இதன்போது வேண்டுகோள் விடுத்தார்.

13 வருடகாலமாக சரணடைந்த எமது உறவுகள் எங்கே, சரணடைந்த ஆயிரக்கணக்கானோரை போரூந்துகளில் ஏற்றிச் சென்றார்கள் எங்கே, எங்கள் குருதியை அறிஞ்சினாய், எதுவரை எங்கள் கண்ணீரை உறிஞ்சுவாய், பாதகனே என் கணவர் எங்கே, புத்தனும் மன்னிக்கான் அவன் பேரால் அமைதியை குலைக்கும் பேரினவாதிகளே அவர்களுக்கு என்ன நடந்தது என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு பொத்துவில் இருந்து முள்ளிவாய்க்கால் வரையிலான பயண இன விடுதலை தேடிய நடைபாதையில் இணைந்து கொண்டவர்கள் ஏந்திச் சென்றமையும் குறிப்பிடத்தக்கது.

## வடக்கு கிழக்கில் 1000 விகாரைகளை கட்டுவதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆதரவு

(பாறுக் ஷிஹான்சு

வடக்கு கிழக்கில் 1000 விகாரைகளை கட்டுவதற்கு கண்ணை மூடிக்கொண்டு தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆதரவு வழங்கி இருக்கின்றது என என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் 4 ஆம் நாளினை நினைவுகூறும் முகமாக முள்ளிவாய்க்கால் கஞ்சியை நினைவுகூறும் நிகழ்வொன்று அம்பாறை மாவட்டம் வீரமுனை பகுதியில் உள்ள படுகொலை நினைவுத்தூபி முன்பாக ஞாயிற்றுக்கிழமை (15) இடம்பெற்ற வேளை மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது;

எமது மக்களுக்கு ரணிலின் கடந்த கால நரித்தனமான போக்கு நன்கு தெரியும். அவர் எமது மக்களை மெது மெதுவாக கருவறுப்பார். 6 ஆவது தடவையாக அவர் பிரதம மந்திரியாக வந்திருக்கின்றார் என



நான் நினைக்கின்றேன். இவரது ஆட்சிக் காலத்தில் எமது மக்களை மிக மோசமான கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. கடந்த நல்லாட்சியிலும் கூட வடக்கு கிழக்கில் 1000 விகாரைகளை கட்டுவதற்கு இவர் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இதற்கு கண்ணை மூடிக்கொண்டு குறிப்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆதரவு வழங்கி இருக்கின்றது. அதன் பின்னர் ஏனைய அரசாங்கமும் இச்செயற்பாட்டை தொடர்ந்து வந்தது. வடக்கில் கடந்த வாரம் கூட இராணுவ தளபதி சவேந்திர சில்வா கூட அங்கே ஒரு விகாரைக்கு அடிக்கல் நாட்டி இருந்தார். அதே போன்று பொன்னாலை ஊர்காவற்றுறை போன்ற இடங்களில் தனியார் காணிகள் பறிக்கப்பட்டு இராணுவ முகாங்கள் அமைக்கும் செயற்பாட்டினை மேற்கொண்டிருந்தார்கள். இவ்வளவு பஞ்சம் பட்டினியான காலங்களிலும் கூட சிங்கள தேசிய வாதத்தினரின் மனோ நிலை மாறவில்லை. அவர்கள் கட்டமைப்பு சார் இனவழிப்புகளை மேற்கொள்கின்றார்கள். ஆகவே எமது மக்கள் மிகத் தெளிவாக இருக்க வேண்டும் என்றார்.

மேலும் இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் இணைப்பாளர் புஷ்பராஜ் துஷானந்தன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வாழைச்சேனை கோறளைப்பற்று பிரதேசசபை குணராசா குணசேகரன் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டதுடன் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சப்பட்டு வீதியால் சென்ற மக்களுக்கு வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் விளக்கேற்றி அஞ்சலி





(காரைதீவு நிருபர் சகா)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று (16)திங்கட்கிழமை கல்முனை மாநகரில் நடைபெற்றது.

கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரன் ராஜன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது .

அங்கு மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜீ.சிறிநேசன் பா.அரியநேத்திரன் மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் மேயர் தி.சரவணபவான் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.கே.கோடீஸ்வரன் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் மு.இராஜேஸ்வரன் உள்ளிட்ட பல அதிதிகள் கலந்து கொண்டனர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கஞ்சி காய்ச்சி அங்கு பொது மக்களுக்கு வழங்கப்பட்டது. அங்கு மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எல்லாம் கலந்து கொண்டார்கள்.

அங்கே முதலிலே நெய் விளக்கு ஏற்றப்பட்டு அந்த மக்களுக்காக ஆத்மார்த்த அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து கஞ்சி காய்ச்ச பட்டு அங்கிருந்த அனைவருக்கும் வழங்கப்பட்டது .

அதனை தொடர்ந்து கலந்து கொண்ட அதிதிகள் தங்களது கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்கள்.

## திருமலையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பகிர்ந்தளிப்பு





(ரவ்பீக் பாயிஸ்

2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின் போது படுகொலை செய்யப்பட்ட உறவுகளை நினைவு கூறும் வகையில் திருகோணமலையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பகிர்ந்தளிக்கப்பட்டது.

திருகோணமலை சிவன் கோவில் ஆலயத்தின் முன்றலில் கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோர் உறவினர்களின் ஏற்பாட்டில் நேற்று (16) முள்ளிவாய்க்கால் கஞ்சி பகிர்ந்து அளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோர் உறவினர்களின் சங்கத்தின் தலைவி நாகேந்திரன் ஆஷ இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

இன்றைய நாள் தமிழர்களின் வரலாற்றில் மிகவும் முக்கியமான ஒரு நாள் முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் கொத்துக் கொத்தாக தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்ட வரலாற்றில் இடம் பிடித்த ஒரு நாள் எனவும் முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் கடைசி யுத்தத்தின்போது தங்குவதற்கு இடமில்லாமல் உண்பதற்கு உணவில்லாமல் தவித்த மக்களை நினைவு கூரும் வகையில் இன்றையதினம் திருகோணமலை சிவன் கோவில் வளாகத்தில் உப்புக் கஞ்சி காய்ச்சி அவர்களை நினைவு கூறுகின்றோம் என தெரிவித்தார்.

மேலும் இவ்வாறு இலட்சக்கணக்கான மக்கள் கொன்று குவித்த இந்த தினத்தினை எதிர்கால சந்ததியினருக்கு எடுத்துக்கூறும் நோக்கிலும் அவ்வாறு கொன்று குவிக்கப்பட்ட மக்களின் ஆத்மா சாந்தியடையம் இன்றைய தினம் திருகோணமலை சிவன் கோவில் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோர் உறவினர்களின் சங்கத்தின் தலைவி நாகேந்திரன் ஆஷ தெரிவித்தார்.

## மட்டக்களப்பில் தமிழ்தேசிய கூட்டமைப்பினால் முள்ளிவாய்க்கால் நினைவு

மட்டக்களப்பில் வழமைபோல் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு எதிர்வரும் (18/05/2022) திகதி புதன்கிழமை மு.ப, 9, மணிக்கு மட்டக்களப்பு கல்லடி பிரதான வீதி ஸ்ரீமுருகன் ஆலயத்தில் இடம்பெறும் என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்காலில் கடந்த 13 வருடங்களுக்கு முன்பு இனப்படுகொலைசெய்யப்பட்ட எமது உடன் பிறப்புக்களை நினைவு கூர்வது எமது உரிமை.

கடந்த 2019, ம் ஆண்டு முதலாவது முள்ளிவாய்க்கால் நினைவு நாளை பல அச்சுறுத்தல் மத்தியில் இலங்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுமே கொக்கட்டிச்சோலை ஸ்ரீதான்தோன்றீஷ்வர்ர் ஆலயத்திலும், மட்டக்களப்பு மாமாங்கேஷ்வர்ர் ஆலயத்திலும் நடத்தினோம்.

(2010 தொடக்கம் தொடர்ந்து மட்டக்களப்பில் தமிழ்தேசிய கூட்டமைப்பு மூலம் முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வு இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

## கல்முனையில் சர்வதேச தாதியர் தினம்









கல்முனை ஆதார வைத்தியசாலையில் சர்வதேச தாதியர் தினம் கொண்டாடப்பட்டது. வைத்திய அத்தியட்சகர் டாக்டர் இரா.முரளீஸ்வரன் முன்னிலையில் தாதியர் தினம் இடம்பெற்ற போது..

**படங்கள்:**
**காரைதீவு சகா.**

# தமிழ்மக்களுக்கு செய்த அட்டூழியமே ராஜபக்சாக்களின் அழிவுக்கு காரணம் மக்களின் சாத்வீக போராட்டங்கள் சக்திமிக்கவை: அடக்கினால் வேடிக்கும்!

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன்

**(காரைதீவு சகா)**

இந்த நாட்டின் பூர்வீக குடிகளாகிய தமிழ்மக்களுக்கு செய்த துரோகமும் அட்டூழியமுமே ராஜபக்சாக்களின் அழிவுக்கு காரணம். இன்று நாடு சின்னாபின்னமாகியமைக்கும் காரணம் அதுவே. இனி வருபவர்கள் யாராக இருந்தாலும் இதை மறந்து செயற்படாதிருக்க வேண்டுகிறோம்.

இவ்வாறு சமகால நாட்டு நிலைவரம் தொடர்பில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் கல்முனை மாநகரசபை உறுப்பினரும் சமூக செயற்பாட்டாளருமான சந்திரசேகரம் ராஜன் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

ʻஅரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும்ʼ என தமிழின் முதல் காப்பியமான சிலப்பதிகாரம் 2000ஆண்டுகளுக்கு முன்னே கூறிநிற்கிறது. புராண இதிகாசங்கள் காப்பியங்கள் இலக்கியங்கள் பொய்யைக்கூறவில்லை. படிப்பது தேவாரம் இடிப்பது சிவன்கோயிலாக இருக்கக்கூடாது. செய்கின்ற பாவச்செயல்களை அட்டூழியங்களை எல்லாம் செய்துவிட்டு ஆலயதரிசனம் செய்து என்ன பயன்? செய்த பாவங்களை அறுக்கவேண்டாமா? ʻநன்றும் தீதும் பிறர்தர வாராʼ என கனியன் பூங்குன்றனார் அன்றே சொன்னார். நாம் செய்ததை நாமே அறுக்க வேண்டும். இது அரசனுக்கும் ஆண்டிக்கும் பொதுவானதே. அதுதான் இன்று நடக்கிறது.



ஜனாதிபதியை பதவி விலகக் கோரியும் விலைவாசி உயர்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் 30நாட்காளக போராட்டங்களை முன்னெடுத்து வருகின்ற பொது மக்கள் மீது ராஜபக்ச அரசாங்கம் தமது அடியாட்களை ஏவிவிட்டு தாக்குதல் மேற்கொண்டனர். இவ் சம்பவமானது மிகவும் காட்டுமிராண்டித்தனமான ஈனச்செயலாகும் அதன் விளைவு நாடெங்கிலும் அவர் சார்ந்த அரசியல்வாதிகளின் வீடுகள் தீக்கிரையாகின. மேலும் போராட்டம் முன்னரைவிட மேலும் உக்கிரமடைந்துவருகின்றது.

மக்கள் சக்தி அபரிமிதமானது. அதற்கு முன் எந்த சக்தியாலும் தாக்குபிடிக்கமுடியாது.

அரசாங்கத்தின் தவறான தீர்மானங்கள் ஊழல் மோசடிகள் காரணமாக தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பாரிய பொருளாதார நெருக்கடியால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்றனர். வாழ்க்கைச் சுமையை தாங்கிக் கொள்ள முடியாமல் திண்டாடும் மக்கள் தமது பிரச்சினைகளுக்கு தீர்வு கோரி சாத்வீகப் போராட்டங்கள் நடத்துவது அறவழிப்பாற்பட்டது.

இந்த அரசாங்கம் ஜனநாயகம் மனித உரிமைகள் மத சுதந்திரம் தமிழரின் சமய கலாசார உரிமைகள் போன்றவற்றை அடக்குமுறைகளை கையாண்டதன் விளைவாகவே சர்வதேசம் இலங்கைக்கு உதவ முன்வராமல் கைவிரித்திருந்தது.

பௌத்த இஸ்லாம் மத அறநெறிப்பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு மாதாந்த கொடுப்பனவுகளை வழங்குகிறது. ஆனால் இந்து அறநெறிப்பாசாலைக்கு அது மறுக்கப்பட்டது. அதுபோல மதவழிபாடு நோன்புக்கு லீவு விடுமுறை வழங்கப்படுகிறது.ஆனால் இந்துசமய விரதம் பாதயாத்திரைக்கு ஒருநாள் லீவு கூட வழங்கப்படுவதில்லை. இப்படிப்பல பாரபட்சங்கள்.

மக்களின் அவலக்குரல்களுக்கு செவிசாய்த்து பொருளாதார பிரச்சினைகளுக்கு அவசரமாக தீர்வினைத் தேட வேண்டியதே அரசின் மீதுள்ள கடமையாகும்.

ஆனால் அதனை புறந்தள்ளி விட்டு அதற்குப் பதிலாக வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டுள்ளனர். இவ்வாறு அரச அராஜகத்தை கட்டவிழ்த்து விடுவதற்காகத்தான் ஜனாதிபதி அவசரகால சட்டத்தை பிரகடனப்படுத்தியிருக்கிறாரா?

மக்களின் நியாயமான போராட்டங்களை அடக்கியொடுக்க முற்படுவதானது நிலைமையை இன்னும் மோசமடையச் செய்து பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும்.

மக்கள் சக்திக்கு முன்னால் அரச அராஜகம் நீண்ட நாட்களுக்கு தாக்குபிடிக்காது என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும். அதன் முதற்படியே மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியில் இருந்து இராஜினாமா செய்திருக்கிறார். எனினும் அவர் கௌரவமாக பதவி விலகியிருக்க வேண்டும். ஆனால் அந்த சந்தர்ப்பத்தை தவற விட்டு கூலிப் படையை ஏவி கலவரங்களை ஏற்படுத்தி விட்டு இரத்தக்கறை படிந்த கரங்களுடன் அவமானப்பட்டு- அவப்பெயருடன் விடை பெற்றிருக்கிறார்.அதுவும் தேசியத்தலைவர் முன்மொழிந்த ஈழத்தின் தலைநகரான திருமலை நகரமே அவருக்கு இறுதியாக கைகொடுத்தது என்பதை அவர் மறந்துவிடக்கூடாது.

இந்நிலையில் ஸ்திரமானதும் சர்வேதேசம் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான ஆட்சியொன்று அமைவதன் ஊடாகவே பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு காண முடியும் .இனியும் தாமதியாமல் ஜனாதிபதி அதற்கு வழி விட வேண்டும் என இச்சந்தர்ப்பத்தில் மக்கள் சார்பில் வலியுறுத்துகின்றோம்.

## தேசிய இளைஞர் கொள்கைகளை மறுசீரமைக்க

# இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் மொஹம்மட் ரிமாஸ் ரணில் விக்ரமசிங்கவிடம் கோரிக்கை





**(சில்மியா யூசுப்)**

தேசிய இளைஞர் கொள்கைகளை மறுசீரமைக்க இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் மொஹம்மட் ரிமாஸ் ரணில் விக்ரமசிங்கவிடம் கோரிக்கை.

இளைஞர் பாராளுமன்றத்தின் வெளிவிவகார ஆலோசனைக்குழு அமைச்சினுடைய, மாத்தளை மாவட்ட இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஆர். மொஹமட் ரிமாஸ் ரணில் விக்ரமசிங்கவுடன் அண்மையில் சிறிகொத்தயில் சந்தித்து தேசிய இளைஞர் கொள்கைகளை மறுசீரமைக்க கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டார்.

நாம் நெருக்கடிகளின் நடுவில் இருக்கும் போது, முன்னோக்கிச் செல்வதற்கான ஒரே வழி, நாம் மீண்டும் கட்டியெழுப்பவும், மறுபரிசீலனை செய்யவும், மறுசீரமைக்கவும் தொடங்க வேண்டும். நிச்சயமாக, இளைஞர்களின் நம்பிக்கையை கட்டியெழுப்ப தேசிய இளைஞர் கொள்கைகள் மறுசீரமைக்கப்பட வேண்டும் என ரிமாஸ் குறிப்பிட்டார்.

இந்த சந்தர்ப்பத்தில், முன்னாள் பிரதமர் ரணில் இலங்கை அடையாளத்தை உருவாக்குவதற்கான அவரது பொதுவான தாலைநாகேʼகு சிந்தனை, பரந்த அறிவு, அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் பரந்த அளவிலான அம்சங்களில் நிபுணத்துவத்தை கலந்தாலோசித்திருந்தார்.

மேலும் தற்பொழுது முகம் கொடுத்து இருக்கும் இக்கட்டான சூழ்நிலையில் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கான வழிமுறைகள், முற்போக்கான பார்வைகள் மற்றும் சமகால இளைஞர்களின் தேவைகள், நம்பிக்கைகள் மற்றும் விருப்பங்களுக்கு ஏற்ப பலனளிக்கும் கருத்துக்கள், முதலியன கலந்தாலோசிக்கப்பட்டன.

# மாபெரும் இரத்ததான முகாம்

**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு சிவானந்தா விளையாட்டுக்கழகத்தின் 50வது வருட பூர்த்தியை முன்னிட்டு மாபெரும் இரத்ததான நிகழ்வொன்று சிவானந்தா தேசிய பாடசாலையில் பிரதான ஒன்று கூடல் மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் தற்பொழுது நிலவிவரும் குருதி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக இவ் இரத்ததான நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இரத்ததான நிகழ்வில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டதுடன் இதில் குறிப்பாக மட்டக்களப்பு இராணுவத்தினரும் தங்களது பூரண ஒத்துழைப்பை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. இரத்ததான நிகழ்வில் சிவானந்தா விளையாட்டு கழகத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# போலிசாரின் அதிரடி: திருமலையில் பலர் கைது



**(ரவ்பீக் பாயிஸ் )**

திருகோணமலையில் ஆர்ப்பாட்டம் மற்றும் வன்முறைகளில் ஈடுபட்டதாக சந்தேகத்தின் பேரில் 15 க்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

திருகோணமலை கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்திலேயே இவ்வாறு கைதுகள் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரின் வீடுகள் சேதமாக்கப்பட்டமை தொடர்பில் பொலிசாரினால் வாக்குமூலம் பெறுவதற்காக அழைக்கப்பட்டு சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கைதானவர்களின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தொடர்பில் கருத்து தெரிவித்து சமூக செயற்பாட்டாளரும் இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கத்தின் மாவட்ட செயலாளருமான ரொஷான் அக்மீமன இவ்வாறு கருத்து தெரிவித்தார்

இவ்வாறு திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில அதுக்கோரள அவர்களின் வீடு சேதமாக்கப்பட்டமை தொடர்பில் வாக்குமூலம் வழங்குமாறு பொலிசாரினால் வரவழைக்கப்படும் இளைஞர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் திருகோணமலையில் இடம்பெற்ற அரசுக்கு எதிரான அமைதி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்கள் எனவும் இவ்வாறான கைதுகள் அரசின் சர்வாதிகாரத்தை வெளி காட்டுவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் நாட்டில் ஜனநாயகமான ஆட்சி ஒன்று அமைய வேண்டும் என இளைஞர் யுவதிகள் வீதிக்கு இறங்கி இவ்வாறான போராட்டத்தை முன்னெடுக்கும் இவ்வேளையில் இவ்வாறான கைகளை வன்மையாக கண்டிப்பதாகவும் தெரிவித்த சமூக செயற்பாட்டாளரும் இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கத்தின் மாவட்ட செயலாளருமான ரொஷான் அக்மீமன

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் இவ்வாறான அமைதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கை வைத்து தற்போது கடலின் நடுவில் ஒரு தீவில் மறைந்து இருப்பதாகவும் கோட்டாபய ராஜபக்ச மற்றும் ரணில் அவர்கள் இவ்வாறு சட்டவிரோத அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோரைக் கைது செய்வதை உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் இல்லாவிடின் இவர்கள் இருவரும் ஆளுக்கு ஒவ்வொரு தீவுகளில் மறைய வேண்டிய சூழ்நிலை ஏற்படும் எனவும் தெரிவித்தார்

மேலும் நாளைய தினம் திருகோணமலை நகரின் சமூக செயற்பாட்டாளர் ஒருவரை உப்புவெளி பொலிஸ் நிலையத்திற்கு வாக்குமூலம் பெறுவதற்காக பொலிசரினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக சமூக செயற்பாட்டாளரும் இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கத்தின் மாவட்ட செயலாளருமான ரொஷான் அக்மீமன தெரிவித்தார்.






# வறுமை கோட்டுக்குள் வாழும்

## குடும்பங்களுக்கு உலர் உணவுப் போதிகள்





**( வாஸ் கூஞ்ஞ)**

நாட்டில் நிலவி வரும் இந்த கடினமான பொருளாதார சிக்கலில் மன்னார் பிரதேச செயலகப் பிரிவில் மிகவும் வறுமை கோட்டுக்குள் வாழந்து கொண்டிருக்கும் தெரிவு செய்யப்பட்ட 125 குடும்பங்களுக்கு அத்தியாவசிய உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

சிங்கப்பூரில் உள்ள ஒரு நிறுவனத்தால் மன்னார் மாவட்டத்திலுள்ள 543 வது இராணுவ பிரிகேட் ஊடாக இவ் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

கடந்த சனிக்கிழமை (14.05.2022) மன்னார் நகர சபை மண்டபத்தில் நடைபெற்ற இவ் நிகழ்வானது நான்காவது விஜயபாகு காலால் படையினரே இதற்கான சகல ஏற்பாடுகளையும் மேற்கொண்டிருந்தனர்.

இவ் உலர் உணவுப் பொதிகள் ஒவ்வொன்றிலும் 5 கிலோ அரிசி, ஒரு கிலோ பருப்பு. இரண்டு தேங்காய் ஆகியன உள்ளடக்கப்பட்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை முடக்க முன்னாள் போராளின் பெயர்களை பயன்படுத்த வேண்டாம்

## இந்திய நாளிதழுக்கு எதிராக முன்னாள் போராளிகள் கண்டனம்

கடந்த சில நாட்களுக்கு முன்னதாக இந்தியாவின் நாளிதழான த ஹிந்து நாளிதழில் முன்னாள் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள் இலங்கையில் தாக்குதல் ஒன்றை நடத்த போவதாக வெளியிட்ட செய்தியானது தமிழ் மக்களிடையிலும் புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் போராளிகள் மத்தியிலும் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாக புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் கந்தசாமி இன்பராசா தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் இல்லத்தில் நேற்று (16) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்...

நாட்டில் வலுவடைந்து வரும் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை முடக்குவதற்காக தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளிகள் இணைந்து நாட்டில் தாக்குதல் ஒன்றை நடத்த திட்டமிட்டுள்ளதாக பொய் வதந்திகளை பரப்பி வருவதாகவும் இவ்வாறான செயற்பாட்டினால் நாட்டில் தமிழ் மக்கள் உட்பட புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் ஈழ விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களும் பெரும் அச்சத்துடன் இருப்பதாக தெரிவித்தார்.

மேலும் அயல் நாடான இந்தியா சிங்கள அரசுக்கு எதிரான இறுதி யுத்தத்தின் போது தமிழீழப் போராட்டத்தில் அரசாங்கத்திற்கு ஆயுதபலம் மற்றும்




ராணுவ பலத்தை வழங்கி எமது இனத்தை முற்றுமுழுதாக அளித்த செயற்பாடுகள் மட்டுமல்லாது தற்போது தமிழ் ஈழத்திற்காக போராடிய தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் தமது அன்றாட வாழ்வாதாரத்தை கொண்டு செல்ல முடியாமல் பெரும் கஷ்டத்தில் இருக்கின்ற இவ்வேளையில் இவ்வாறானதொரு தாக்குதல் ஒன்றினை நடத்த திட்டமிட்டுள்ளதாக இந்திய புலனாய்வுதுறை அறிக்கையொன்று வெளியிட்டுள்ளதாக குறித்த நாளிதழ் செய்தி வெளியிட்டிருந்தது இதனால் நாம் பெரும் அச்சத்துடன் இருப்பதாகவும் இவ்வாறு உண்மைக்கு புறம்பான இந்த செய்தியினை முன்னாள் போராளிகள் என்ற வகையில் தாம் வன்மையாக கண்டிப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் போராட்டத்தில் பாதிக்கப்பட்டு சமூகத்தின் மத்தியில் சுமூகமான வாழ்வினை வாழ்ந்து கொண்டிருக்கும் தருவாயில் இந்திய அரசு இவ்வாறான ஒரு அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

குறித்த அறிக்கையின் மூலம் எமது நாட்டிலுள்ள சமூகம் மீண்டும் எம்மை சந்தேகக் கண்ணோடு பார்ப்பது எமக்கு மனவேதனை அளிக்கின்றது எனவும் தெரிவித்தார்

இறுதியாக இந்திய அரசுக்கு புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் என்ற வகையில் ஒன்றை கூறிக் கொள்ள விரும்புகின்றேன் என்னிடம் ஆயுதம் இருக்கின்றது அது எல்லாவற்றையும் விட பலம்வாய்ந்த எமது உயிர் என்பதினை அவர்களுக்கு கூறிக்கொள்ள விரும்புகின்றோம் என புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்சியின் தலைவர் கந்தசாமி இன்பராசா தெரிவித்தார்.

# மட்டக்களப்பு பெரிய புல்லுமலை புதுமைமிகு புனித செபமாலை அன்னை திருத்தல வைகாசித் திருவிழா!!









**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

கிழக்கிலங்கையின் வரலாற்று சிறப்புமிகு கிறிஸ்தவ ஆலயங்களில் ஒன்றான மட்டக்களப்பு பெரிய புல்லுமலை புதுமைமிகு புனித செபமாலை அன்னை திருத்தல வைகாசித் திருவிழா ஞாயிற்றுக்கிழமை திகதி கொடியிறக்கத்துடன் நிறைவுபெற்றது.

அன்னையின் திருத்தல வைகாசித் திருவிழாவானது கடந்த (06) திகதி மாலை 4.30 மணிக்கு பங்குத்தந்தை அருட்பணி பேதுரு ஜீவராஜ் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாட் திருவிழா வழிபாடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து கடந்த 13.05.2022 திகதி காலை 6.30 மணிக்கு கித்துள் புனித மார்டின் தெ போரஸ் ஆலயத்தில் இருந்து பெரிய புல்லுமலை தூய செபமாலை அன்னை திருத்தலம் நோக்கிய பாத யாத்திரை ஆரம்பமாகியதுடன் மறுநாள் 14.05.2022 திகதி அன்னையின் திருச்சுருபத்தை தாங்கிய ரதம் திருத்தலத்தை வந்தடைந்ததும் விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியளவில் திருவிழா கூட்டுத் திருப்பலி மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டதனைத் தொடர்ந்து கொடியிறக்கத்துடன் ஆலய திருவிழா இனிதே நிறைவு பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பாகங்களில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் திருவிழா திருப்பலியில் கலந்து கொண்டதுடன் அன்னையின் ஆசியையும் பெற்றுக்கொண்டிருந்ததுடன், திருவிழாவில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் பொதுநிலையினர் என பெருந்திரளானோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சேனையூர் ஸ்ரீ நாகம்மாள் ஆலய வருடாந்த வைகாசிப் பொங்கல் பெருவிழா.!









**(அ . அச்சுதன்)**

மூதூர் கிழக்கு , கட்டைபறிச்சான் வடக்கில் அமைந்துள்ள சேனையூர் ஸ்ரீ நாகம்மாள் ஆலய வருடாந்த வைகாசிப் பொங்கல் பெருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை மிகச்சிறப்பாக இடம்பெற்றது.

இதன்போது பாரம்பரிய முறைப்படி சேனையூர் ஸ்ரீ வர்ணகுலப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து மடைப்பெட்டி எடுத்து வரப்பட்டு பாரம்பரிய முறைப்படி வளர்ந்து கையேட்கப்பட்டு சேனையூர் ஸ்ரீ நாகம்மாள் ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ அ.அரசரெத்தினம் தலைமையில் பூஜைகள் இடம்பெற்றது. இதன்போது பிரதான நிகழ்வாக ஆலய முன்றலில் பொங்கல் வளர்ந்து வைக்கப்பட்டு புனித சிவலிங்க நாகதம்பிரானுக்கு புனித மஞ்சல் நீர் வார்க்கும் சிறப்பு நிகழ்வும் இடம்பெற்றது.அத்தோடு பக்த அடியார்களின் நேர்கடன் நிகழ்வுகளாக காவடி எடுத்தல், அங்க பிரதிஷ்டை செய்தல், புனித மஞ்சல் நூல் கட்டுதல் என்பன இடம்பெற்றமையும் சிறப்பம்சமாகும்.

இதில் ஆயிரக்கணக்கான பக்த அடியார்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாலயமானது இற்றைக்கு 120 வருடங்களுக்கு முற்பட்ட பழமை வாய்ந்த ஆலயமென்பதும் குறிப்பிடத்தக்கது.

### வேசாக் தினத்தினை முன்னிட்டு

# களுவாஞ்சிகுடி உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தினால் நிகழ்வு





வெசாக் தினத்தினை முன்னிட்டு களுவாஞ்சிகுடி உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நடாத்தப்பட்ட வெசாக்தின கொண்டாட்ட நிகழ்வானது உதவிப் பொலி அத்தியட்சகர் ஜானக்க ரத்நாயக்க தலமையில் இன்று நடைபெற்றது.

இந் இக் கொண்டாட்ட நிகழ்வில் களுவாஞ்சிகுடி பொலிசார் உப்பட பிரதேச பொதுமக்களும் கலந்து கொண்டிருந்தனர் இந் நிகழ்வினை சிறப்பிக்கும் முகமாக களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி விக்கிரமசிங்க மற்றும் உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் இருவரும் இணைந்து மக்களுக்கு சவ்வரிசி கஞ்சினை வழங்கி வைத்தனர்.....

# மடத்தடியில் மகா சங்காபிகேமும் பணி நயப்பு விழாவும்.





**(வி.ரி.சகாதேவராஜா)**

வரலாற்று பிரசித்தி பெற்ற மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலயத்தில் முதலாவது நவோத்ர சகஸ்ர சத மகா சங்காபிஷேகம் அண்மையில் நடைபெற்றது.

ஆலயத்தின் முதலாவது கும்பாபிஷேகம் கடந்த ஏப்ரல் மாதம் ஆறாம் தேதி சிறப்பாக நடைபெற்றமை அறிந்ததே.

கடந்த 29 நாட்களாக மண்டலாபிஷேக பூஜைகள் நடைபெற்று வந்தன.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஷ்வர குருக்கள் தலைமையில் 1008 சங்குகளுடன் நே காலை 08 மணிக்கு எட்டு மணிக்கு சங்காபிஷேக கிரியைகள் ஆரம்பமாகி, முற்பகல் 11 மணியளவில் சங்காபிஷேகம் நடைபெற்றது.

சங்காபிஷேகத்தில் கலந்து கொள்ளும் அடியார்களுக்கு மீனாட்சி அம்மனின் திருவுருவப்படம் பொறித்த வர்ணப் படம் ஒஸ்கார் அமைப்பால் வழங்கப்பட்டது

அதேவேளை இரண்டாம் கட்ட பணிநயப்பு விழா ஆலயத்தில் நடைபெற்றது.

இதேவேளையில் மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கு பல்வேறு கோணங்களிலும் தொண்டாற்றி பணிசெய்து உதவிய அன்பர்களுக்கு இரண்டாம்கட்ட பணிநயப்புவிழா மகாசங்காபிசேகம் நடைபெற்ற வெள்ளியன்று(06) ஆலய சபாமண்டபத்தில் நடைபெற்றது.

இப்பணிநயப்பு விழா ஆலய அறங்காவலர்சபைத்தலைவர் கி.ஜெயசிறில் தலைமையில் அறங்காவலர்சபை ஆலோசகர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜாவின் நெறிப்படுத்தலில் நடைபெற்றது.

விழாவிற்கு முதன்மை அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெகதீசன் கலந்து சிறப்பித்தார். ஆன்மீகஅதிதியாக ஆலயபிரதமகுரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக்குருக்கள் ஆசியுரை வழங்கினார்.

இரண்டாம்கட்ட பணிநயப்புவிழாவில் சிவாச்சார்யர்கள் ஆலய அறங்காவலர்சபையினர் அதீதநிதியுதவி நல்கியோர் மற்றும் மண்டலாபிசேகபூஜை உபயகாரர்கள் ஆகியோருக்கு மீனாட்சிதுரந்தரர், இறைபணிச் செம்மல், இறைநேசர் என்ற பட்டம் வழங்கி பாராட்டுமடல்கள்வழங்கப்பட்டன.



ஊடகவியலாளர் பைஷல் இஸ்மாயில் தொகுத்த நோயும் தீர்வும் என்ற நூல் அறிமுக நிகழ்வு திருகோணமலையில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கலந்துகொண்ட கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் சாமஸ்ரீ தேசகீர்த்தி (திருமதி) ஜே.ஜே.முரளிதரனிடம் நோயும் தீர்வும் என்ற நூலின் பிரதியை தொகுப்பாசிரியரும், ஊடகவியலாளருமான பைஷல் இஸ்மாயிலினால் வழங்கி வைப்பதை படத்தில் காணலாம்.

# உலகில் தொலைத்தொடர்பு இல்லாமல் மனிதன் இல்லை

## மே 17 உலக தொலைத்தொடர்பு தினம்

இன்று உலகின் அனைத்து நாடுகளிலும் தொலைத்தொடர்பு தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. மனிதனுடைய வாழ்க்கையில் இன்றியமையாத ஒரு முக்கியமான விடயமாக காணப்படுவது தொலைத் தொடர்பாகும். தொலைத் தொடர்பானது மனிதனுக்கு வரவேற்கத் தக்க மகத்தான சேவையாற்றி வருகின்றது. இன்றைய உலகில் மிக வேகமாக வளர்ந்து கொண்டுவரும் பல்வேறு துறைகளுள் தொலைத் தொடர்புத் துறையே முதன்மையானதாக விளங்குகின்றது. ஆரம்ப காலத்தில் காணப்பட்ட தொலைத் தொடர்பிற்கும், தற்போது காணப்படுகின்ற தொலைத்தொடர்புகளுக்கும் பல்வேறு வித்தியாசங்கள் உள்ளன.

1969 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி உருவான சர்வதேச தொலைத்தொடர்பு அமைப்பானது தொலைத்தொடர்பு தினத்தை அறிமுகப்படுத்தியது. இந்த அமைப்பானது தொலைத்தொடர்பு ஆற்றிவரும் மகத்தான சேவையினை பற்றி மனித குலத்திற்கு விழிப்புணர்வு செய்து வருகின்றது. ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படும் இத் தினமானது தொலைத்தொடர்பு நாட்டின் அபிவிருத்திற்கும், மனிதாபிமான வளர்ச்சிக்கும் உதவுவதை எடுத்துக்காட்டுதல் என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

மனித குலத்தின் ஆரம்ப காலத்தில் செய்திகளை பரப்புவதற்கு, தீ மூட்டுதல், பறையடித்தல் முரசு ஊதுதல், குதிரையில் தகவலைக் கட்டி அனுப்புதல், தூதுவர்களை அனுப்புதல், புறாவை தூது அனுப்புதல் போன்ற தொலைத்தொடர்பு முறைகள் பயன்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து அஞ்சல் சேவை அறிமுகப்படுத்தப்பட்டது. இதனை முதன்முதலில் பயன்படுத்தியவர் பெர்சிய மன்னரான சைரஸ் என்பவராவார். அத்தோடு 1838 ஆம் ஆண்டு மின்சார வழி தந்தி தொடர்பை சாமுவேல் மோர்ஸ் என்பவர் தன்னுடைய நண்பர்களுடன் சேர்ந்து உருவாக்கினார். இவ்வாறு தொலைத் தொடர்பு வளர்ச்சியடைந்து இன்று முழு உலகுடன் நொடிப்பொழுதில் தொடர்பு கொள்ளும் அளவிற்கு மின்னஞ்சல், குறுஞ்செய்தி பரிமாற்றம் வரை தொலைத் தொடர்பாடல் துறையானது மிக வேகமாக வளர்ச்சியடைந்து கொண்டு வருகின்றது.

நவீன தொலைத்தொடர்பு வரலாற்றுப் பின்னணியில், 1450 ஆம் ஆண்டு ஜோகன்ஸ் ஹட்டன்பாக் என்பவர் அச்சு இயந்திரத்தை கண்டுபிடித்தார். 18%6 மார்ச் 10 ஆம் திகதி அலெக்ஸ்சாண்டர் கிரகம் பெல் தொலைபேசி பாவனையை அறிமுகப்படுத்தினார். இவ்வாறு நவீன தொலைத் தொடர்பு வளர்ச்சியடையத் தொடங்கியது. இன்று வானொலி, கையடக்கத் தொலைபேசி, பெக்ஸ், மின்னஞ்சல், இணையம், முகம்பார்க்கும் தொலைபேசி இணைப்புக்கள், செய்மதித் தொடர்புகள் என தொலைத்தொடர்பு அதீத வளர்ச்சியினைக் கண்டிருக்கின்றது. அது மட்டுமன்றி தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தின் செயற்பாட்டிற்கு மூலகாரணமாக விளங்குவது தொலைத் தொடர்பு தொழிநுட்பமாகும்.



இன்றைய காலகட்டத்தில் தொலைத்தொடர்பு இல்லாமல் மனிதர்கள் இல்லை. மனிதனுடைய அனைத்துவிதமான தேவைகளும் தொலைத் தொடர்பினை மையமாகக் கொண்டே அமைகிறது. மனிதனின் அனைத்துவிதமான செயற்பாடுகளும் தொலைத் தொடர்பு தொழிநுட்பத்தினை மையமாகக் கொண்டது. தற்கால உலகில் எத்தனையோ துறைகள் காணப்படுகின்றது. அந்த அனைத்துவிதமான துறைகளின் செயற்பாட்டிற்கும் தொலைத்தொடர்பு தொழிநுட்பத் துறையே ஆணிவேராகக் தொழிற்படுகின்றது என்றால் அது மிகையாகாது.



அரசியல், வர்த்தகம், கருத்துப் பரிமாற்றம், கல்வி, வங்கி, பொழுதுபோக்கு, சுற்றுலா, செய்திப் பரிமாற்றம், தகவல் தொடர்பாடல், போக்குவரத்து. என பல தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு தொலைத்தொடர்பு சேவை அவசியமாகின்றது. அது மட்டுமன்றி, இயற்கை அனர்த்;த செயற்பாடுகளை முன்னறிவித்தல் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையை மேற்கொள்ளல், போர் நடவடிக்கைகள், பாதுகாப்பு நடவடிக்கைகள், முதலுதவி மற்றும் நிவாரப்பணிகள் போன்ற பல செயற்பாடுகளுக்கும் ஊன்றுகோலாய் அமைவது தொலைத் தொடர்பாகும்.

இன்றைய உலகம் கணனிமயப்படுத்தப்பட்டது. இவ்வாறான நிலையில் கணனி முறைமைக்கும், தகவல் தொடர்பாடல் முறைமைக்குமான ஒரு பாலமாக தொலைத் தொடர்பு சேவை காணப்படுகின்றது. இன்றைய காலத்தில் கணனி முறைமைக்கும், தொலைத் தொடர்புக்கும் இடையில் மிக நெருக்கமான தொடர்புள்ளது. தகவல்களை சேமித்து வைக்கவும், அவ்வாறு சேமித்த தகவல்களை மீண்டும் பார்க்கவும் இவ்விரு முறைமையும் தொழிற்படுகின்றது. இணையம் எனப்படும் இன்டர்நெற், தொலைத் தொடர்பின் அதீத வளர்ச்சியினைக் காட்டுகின்றது. தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம், தொலைத் தொடர்பு தொழிநுட்பம் ஆகியவற்றின் இணைப்பினைக் கொண்ட இணையமானது ஆரம்பத்தில் இராணுவ நடவடிக்கைக்காகவே உருவாக்கப்பட்டது. ஆனால் இன்று அனைத்துத் தேவைகளுக்கும் இணையம் பயன்படுகின்றது. மேலும் தொலைத் தொடர்பின் செயற்பாட்டிற்கு செய்மதிகள் பாரிய பங்காற்றுகின்றது.

இன்றைய உலகில் தொலைத் தொடர்பு என்பது மனித வாழ்க்கையில் இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. உதாரணமாக கல்வித் துறையில் தொலைத்தொடர்பு சேவையின் பங்களிப்பு பற்றி பார்க்கும் போது, கடந்த காலகட்டத்தில் கொரோனா தாக்கத்தினால் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு இடையிலான நேரடித் தொடர்புகள்மூலம் கல்வி செயற்பாட்டினை மேற்கொள்ள முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது. இவ்வாறான நிலையில் தொலைத் தொடர்புகள் மூலமே கல்வி நடவடிக்கையானது முன்னெடுக்கப்பட்டது. இணையவழி கல்வி, தொலைக்காட்சி, வானொலி, தொலைபேசி போன்ற தொலைத்தொடர்பு சேவையின் ஊடாகவே அவர்களின் கல்வி நடவடிக்கை இடம்பெற்றது. இவ்வாறு பல துறைகளுக்கு தொலைத் தொடர்பு சேவை தனது பங்களிப்பினை வழங்கி வருகின்றது.




படித்தவர்கள் முதல் பாமரர்கள் வரையும், கிராமத்திலுள்ளவர்கள் தொடக்கம் நகரத்திலுள்ளவர்கள் வரை ஒரு நாளாவது தொலைத் தொடர்பினை பயன்படுத்தாமல் எவரும் இருக்க மாட்டார்கள். சற்று சிந்தித்துப் பார்த்தால், அலுவலகங்களில் பணி புரிபவர்களுக்கு கணனியும், இணையமும் அவசியம். வீட்டிலிருந்து ஒருவர் வெளியே சென்று தாமதமானால் அவர்களைத் தொடர்பு கொள்வதற்கு தொலைபேசி அவசியம். வீட்டிலுள்ள பெண்கள் தங்களது பொழுதுபோக்கை கழிப்பதற்கும், உலக நாடுகளின் அன்றாட செய்திகளை அறிந்து கொள்வதற்கும் தொலைக்காட்சி மற்றும் வானொலி மிக மிக அவசியம். அதேபோன்று ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு செல்வதற்கும், தெரியாத இடங்களிற்குச் சென்று பல இடங்களைச்சுற்றிப்பார்ப்பதற்கும் நேவிகேஷன் என்ற அப்ளிகேஷன் பயன்படுகின்றது. இன்று எந்தவொரு இடத்திற்கு செல்வதற்கும் எவருடைய உதவியையும் நாடாவேண்டியதில்லை. நம்மை இன்னொருவர் அழைத்துச் செல்வது போல் நாம் செல்லும் பாதை, நமக்கு முன்னால், நமக்குப் பின்னால் இருக்கும் பகுதிகள் போன்ற அனைத்தினையும் எமக்கு முன்கூட்டியே அறிவிக்கவும், தெளிவுபடுத்தவும் இந்த தொலைத்தொடர்பு தொழிநுட்பம் பாரிய பங்காற்றுகின்றது. தொலைவிலுள்ள உறவுகளோடு இருந்த இடத்தில் இருந்துகொண்டு முகமுகமாய் பார்த்து பேசுவதற்கான வழியினை தொலைத்தொடர்பு தொழிநுட்பம் ஏற்படுத்தி தந்திருக்கின்றது. இதன் மூலம் உறவுகளிடையே உள்ள இடைவெளியினைக் குறைத்து நெருக்கமான தொடர்பினை மேற்கொள்வதற்கு தொலைத்தொடர்பு, வசதியினை ஏற்படுத்தி தந்திருக்கின்றது. மேலும் ஒரு நாட்டினுடைய வரலாற்று நிகழ்வுகள், அந்த நாட்டினுடைய மகிமை, இனம், மதம், பண்பாடு, கலாசாரம், பழக்கவழக்கங்கள், அரசியல், பொருளாதாரம் போன்ற அனைத்துவிதமான தகவல்களையும் அறிந்து கொள்வதற்கு தொலைத்தொடர்பு எமக்கு உதவுகின்றது. உதாரணமாக சுற்றுலாத்துறையினை எடுத்துக் கொண்டால் அதனுடைய வளர்ச்சிக்கும், அபிவிருத்திற்கும் தொலைத்தொடர்பின் பங்களிப்பு இன்றியமையாததாகக் காணப்படுகின்றது.

எனவே தொலைத்தொடர்பின் அபிவிருத்தியானது இன்றைய காலத்தில் மனிதனுக்கு பல சாதகமான, மகத்தான சேவையினை வழங்குகின்ற அதேவேளை, மனிதனுக்கு பாதகமான விடயங்களிற்கும் காரணமாய் இருக்கின்றது. தொலைத்தொடர்பில் செய்மதியின் பங்களிப்பு உலகளாவிய நாடுகளினை வேவு பார்ப்பதற்கும், ஒரு நாட்டினுடைய இரகசியங்களை இன்னொரு நாடு அறிந்து கொள்வதற்கும், அதன் மூலம் வல்லரசுகளின் ஆதிக்கத்தை பேணிக் கொள்வதற்கும், போர் நடவடிக்கைகளுக்கும், அடிப்படையாக அமைகின்றது. ஆகவே எமக்கு கிடைத்திருக்கின்ற பெரிய பொக்கிசமான தொலைத்தொடர்பின் மகத்துவத்தையும், அதனுடைய மகிமையையும் புரிந்து கொண்டு அதனை சரியான விடயங்களிற்கு மட்டும் பயன்படுத்தி எமது தேவைகளை நிறைவேற்றிக் கொண்டு மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ்வோமாக.

**பஞ்சாட்சரம் ஜோன் டிலக்ன்**
**சமூகவியல் மற்றும் மானிடவியல் துறை**
**கிழக்குப் பல்கலைக்கழகம்,**
**இலங்கை.**









## அன்றுதொட்டு இன்றுவரை அமைதி வழிப் போராட்டங்களை

# வன்முறைகளாக மாற்றியவர்கள் சிங்கள ஆட்சியாளர்கள்தான்



ஒரு மாத காலமாக கொழும்பு காலிமுகத்திடலில் மக்கள் அமைதியான முறையில் ஜனநாயக வழியில் உள்நாட்டையும், சர்வதேசத்தையும் ஈர்க்கத்தக்க வகையில் போராட்டம் நடாத்தினர்.இந்தப் போராட்டத்திற்கு பரவலாக மக்களின் ஆதரவு இருந்தது. மனிதவுரிமை அமைப்புகள், சட்டத்தரணிகள் சங்கம்,அரச உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழகங்கள்,சிவில் அமைப்புகள்,மதத்தலைவர்கள்,கலைஞர்கள்,ஊடகவியலாளர்கள்,எதிர்க்கட்சி அரசியலாளர்கள் என்று பலரும் ஆதரவளித்தனர். இப்படியான போராட்டத்தினை சர்வதேசசர்வதேசத் தலைவர்கள்,இராஜதந்திரிகளும் ஜனநாயக ரீதியான மக்களுக்கான உரிமை இதுவென்றனர்.

அப்படியிருக்க பிற மாவட்டங்களில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட குண்டர்கள் அலறிமாளிகைக் கூட்டமொன்றில் கலந்து கொண்டிருந்தார்கள். அக்கூட்டத்தில் பிரதமர் மகிந்த,முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் ஆகியோர் உரையாற்றியுள்ளனர்.அதன் பின்னர் தான் அங்கு கலந்து கொண்டவர்கள் அலறி மாளிகைக்கு அண்மித்திருந்த மைனா கோ கம கூடாரங்களை அழித்ததோடு ஆரப்பாட்டக்கார்ரகளையும் தாக்கியுள்ளனர்.அதனையடுத்து காலிமுகத்திடலுக்கும் சென்று அங்கும் கூடாரங்களை எரித்ததோடு ஆர்ப்பாட்டக்கார்ர்களைத் தாக்கியுள்ளனர்.அமைதியாக வன்முறையில்லாமல் 30 நாட்கள் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களை குண்டர்கள் ஒரு சில மணித்தியாலங்களில் வன்முறைக் களங்களாக மாற்றினர். அதிரடியான அந்தத் தாக்குதலுக்கு எதிரடியினைச் செய்வதற்காக அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்கள் சார்பாக ஆயிரக்கணக்கான மக்கள் ஈடுபட்டனர்.



**ஜி.ஸ்ரீநேசன்,**
**முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், மட்டக்களப்பு**

இச்செய்திக் குறிப்பு எழுதிய போது அறிந்த தகவலின் படி 9 பேர் உயிர் இழந்துள்ளளனர்.அதில் பொலாறுவை பா.உ அமரகீர்த்தி அத்துக்கோறளயும் அடங்குவார்.மேலும் 250 பேர் காயமடைந்துள்ளனர்.88 வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன.38 வாகனங்ள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. 104 வீடுகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன.அலறிமாளிகையில் உரையாற்றிய அப்போதையப் பிரதமர் மகிந்த, முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் உரைகளின் பின்னரே இந்த வன்முறைகள் வெடித்துள்ளன. பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை குறிப்பிடுவது போல் ஆட்சியைப் பிடிப்பதற்கும் ஆட்சியைத் தொடர்வதற்கும் வன்முறைகள் என்பது ஆட்சியாளர்களின் சூழ்ச்சியாக இருப்பதைக் காண முடிகின்றது.நாடு,மக்கள் எக்கேடு கெட்டாலும் தமது வர்க்கம் அதிகார நாற்காலியில் தொடர்ந்தும் இருக்க வேண்டும் என்பதே இலங்கை ஆட்சியாளர்களின் ஒரே இலக்காக துள்ளது. பிலிப்பைன்சின் முன்னாள் பிரதமர் மார்கோஸ் தேர்தல் மோசடிகள் மூலமாக தொடர்ந்தும் அதிகார நாற்காலியில் இருந்தார். ஊழல் மோசடிகள் அவரது கைவந்த கலை. இறுதியாக 10 இலட்சம் மக்கள் அவரது அதிகார மாளிகையைச் சுற்றிச் சூழ்ந்ததும் விசேட வானவூர்தி மூலமாக குடும்பத்துடன் அமெரிக்காவில் தஞ்சம் அடைந்தார்.சர்வாதிகாரி இடியமின் உகண்டாவில் படுமோசமான அநாகரிகமான ஆட்சியைச் செய்தான். இறுதியில் உகண்டாவில் இருக்க முடியாத நிலையில் சவூதி அரேபியாவில் தஞ்சமாகி அங்கே இறந்தான். இவையெல்லாம் எமது ஆட்சியாளர்கள் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும்.

எதை விதைக்கிறோமோ அதனை அறுக்க வேண்டியே ஏற்படும். வன்முறைகளை விதைத்தால் அதற்கான விளைவும் வன்முறையான அறுவடையாகவே அமையும்.லிபியத் தலைவர் கேணல் கடாபி எப்படித் தண்டிக்கப்பட்டார் என்பது அண்மைய சரித்திரமாகும்.அபதந்திரம் தனக்கந்திரம் என்பது அர்த்தமான பொருள் பொதிந்த கருத்தாகும்.

**பிற மாவட்டங்களில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட குண்டர்கள் அலறிமாளிகைக் கூட்டமொன்றில் கலந்து கொண்டிருந்தார்கள். அக்கூட்டத்தில் பிரதமர் மகிந்த,முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் ஆகியோர் உரையாற்றியுள்ளனர். அதன் பின்னர் தான் அங்கு கலந்து கொண்டவர்கள் அலறி மாளிகைக்கு அண்மித்திருந்த மைனா கோ கம கூடாரங்களை அழித்ததோடு ஆரப்பாட்டக்கார்ரகளையும் தாக்கியுள்ளனர். அதனையடுத்து காலிமுகத்திடலுக்கும் சென்று அங்கும் கூடாரங்களை எரித்ததோடு ஆர்ப்பாட்டக்கார்ர்களைத் தாக்கியுள்ளனர். அமைதியாக வன்முறையில்லாமல் 30 நாட்கள் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களை குண்டர்கள் ஒரு சில மணித்தியாலங்களில் வன்முறைக்களங்களாக மாற்றினர். அதிரடியான அந்தத் தாக்குதலுக்கு எதிரடியினைச் செய்வதற்காக அமைதியான ஆர்ப்பாட்டக்கார்ர்கள் சார்பாக ஆயிரக்கணக்கான மக்கள் ஈடுபட்டனர்.**





# வன்முறை சம்பவங்களை கட்டுப்படுத்த போலிஸாருக்கு துப்பாக்கிச் சூடு நடத்த உத்தரவு


நடேசன் குகதர்சன்

## வன்முறை சம்பவங்கள் யாரால் மேற்கோள்ளப்பட்டது

கடந்த திங்களன்று அமைதியான முறையில் போராட்டத்தை மேற்கொண்டுவந்தவர்கள் மீது சிலர் மேற்கொண்ட தாக்குதல் காரணமாக நாடளாவியரீதியில் பெரும் போராட்டங்களும் வன்முறைகளும் வெடிக்க தொடங்கியதை அடுத்து பிரதமர் பதவியில் இருந்து மஹிந்த ராஜபக்ஸ இராஜினாமா செய்ய நேரிட்டது.

பொதுச் சொத்துக்களைக் சேதம் வினைவிப்பவர்கள் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ள இராணுவத்திற்கு அரசாங்கம் உத்தரவிட்டது.


பல்லாயிரக்கணக்கான இராணுவம் கடற்



படை மற்றும் விமானப்படை வீரர்கள் கொழும்பு வீதிகளில் ரோந்து பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் இருந்த போதிலும்இ கொழும்பு நகரில் மேல் மாகாணத்துக்கான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியான தேசபந்து தென்னக்கோன் மீது குண்டர்களால் தாக்கப்பட்டார்இ அவர் அமைதியான போராட்டக்காரர்களைப் பாதுகாக்க போதுமான நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றம் சாட்டினார்.

கடந்த திங்கட்கிழமை முதல் நாட்டில் இடம்பெரும் இவ்வாறான அசம்பாவிதமான சம்பவங்கள் காரணமாக எட்டு பேர் உயிரிழந்துள்ளதாகவும், 249க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்களை தாக்கி தாக்குமாறு மகிந்த தனது ஆதரவாளர்களுக்கும் பாதுகாப்பு படையினருக்கும்ங்கஇ நாட்டின் நிராயுதபாணியான மக்களை வீதியில் இறங்குமாறு அழைப்பு விடுத்துள்ளார்.


ஹரிந்த பொன்சேகா

இலங்கையில் நிலவும் அமைதியின்மையை அடக்கும் வகையில் பொதுசொத்துக்களுக்கு சேதம் வினைவிக்கும் நபர்களுக்கு எதிராக அரசு துப்பாக்கிச் சூடு நடத்த உத்தரவு பிறப்பித்துள்ளது

நாட்டில் அரசுக்கு எதிரான போராட்டங்கள் மற்றும்இ சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுப்படுபவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த பாதுகாப்புப் படையினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

வரலாற்றில் இலங்கையில் ஏற்பட்டுள்ள மோசமான பொருளாதார நெருக்கடி காரணமாக


பேராசிரியர் ஆசு மாரசிங்க

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டுமென அமைதியான முறையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


தர்ஷன ஹந்துங்கொட

கவனக்குறைவாக அறிவுறுத்தியதாக இலங்கையின் மூத்த ஊடகவியலாளரும் பிரபல சமூக அரசியல் ஆய்வாளருமான தர்ஷன ஹந்துங்கொட சுட்டிக்காட்டியுள்ளார்.

ராஜபக்ச குடும்பத்தை நாட்டை விட்டு வெளியேற்றுவதே நெருக்கடியை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஒரே வழி என தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் அசு மாரசி

கத்தை அளித்தனர்இ அதுதான் உண்மை கதை. இது அரசியல் உலகில் இரகசியமில்லை. மஹிந்த ராஜபக்ஸ மறைமுகமாக இவர்களை தூண்டினார். அதனால்தான்இ நிராயுதபாணியானஇ அப்பாவி பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்களின் போராட்டத்தின் மீது வன்முறை கட்டவிழ்த்தப்பட்டது. இதனால் இவர்கள் மிகவும் கொடூரமான முறையில் தாக்கப்பட்டனர்.

### ஹரிந்த பொன்சேகா - சமூகசெயற்பாட்டளர்

கடந்த ஒருமாதகாலமாக அமைதியான முறையில் ஆர்ப்பாட்டகாரர்கள் ஆர்ப்பட்டத்தை மேற்கொண்டுவந்தவர்கள் இவர்கள் மீது மஹிந்த ராஜபக்ஸவிற்கு ஆதரவான தரப்பினர் கோட்டா கோ கமவிற்கு வருகை தந்து தாக்குதலை மேற்கொண்டனர். ஆவேசத்தை கட்டுப்படுத்திகொள்ள முடியாத குறித்த குழுவினர் அமைதினயான முறையில் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டடோர் மீதும் அவர்களது கூடாரங்களுக்கு சேதத்தினை ஏற்படுத்தியுள்ளனர். இதில் இருந்து ஒன்று தெரிவாக புலப்படுகின்றது நாட்டை கட்டியெழுப்பவேண்டும் என நினைக்கு ஒரு குழுவினர் இதற்கு எதிராக செயற்படும் இன்னுமோர் குழுவும் செயற்படுவதை அவதானிக்ககூடியதாக உள்ளது. அதிகார வலுவை இழக்கின்றபோது பயத்தின் காரணமாக இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர்.

### தர்ஷன ஹந்துங்கொட - சிரேஷ்ட ஊடகவியலாளரும் பிரபல சமூக அரசியல் ஆய்வாளர் கட்

‘அது மட்டுமன்றிஇ இன்று இந்த காணொளியை பதிவிடும் போது இதுவரையில் 8 பேர் உயிரிழந்துள்ளதுடன்இ கிட்டத்தட்ட 215 பேர் வரையில் படுகாயமடைந்துள்ளனர். இந்த 8 கொலைகளுக்கும் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷஇ அதாவது தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் நேரடியாகப் பொறுப்பு கூறவேண்டும்.

அப்பாவி பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட இந்த காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் மற்றும் இடம்பெற்ற கொலைகள் தொடர்பில் மஹிந்த ராஜபக்ஷவை கைது செய்யுமாறு சட்டத்தரணிகள் சங்கத்திற்கு முன்மொழிகின்றோம். எனவேஇ குறித்த வன்முறை சம்பவம் தொடர்பில் விசாரிக்க வேண்டும்இ சாட்சிகளை அழைக்க வேண்டும்இ தற்போது அவர்கள் திருகோணமலை உள்ள ஒரு தீவில் உள்ளனர். நாட்டை விட்டு வெளியே முயற்சிக்கின்றனர் அவர்களை நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்கக்கூடாதுஇ அவர்களை கைது செய்துஇ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திஇ குற்றவாளிகளை சிறையில் அடைக்க வேண்டும். என சிரேஷ்ட ஊடகவியலாளரும் இலங்கையின் பிரபல சமூக அரசியல் ஆய்வாளருமான தர்ஷன ஹந்துங்கொட தெரிவித்துள்ளார்.’

### தர்ஷன ஹந்துங்கொட - சிரேஷ்ட ஊடகவியலாளரும் பிரபல சமூக அரசியல் ஆய்வாளர் கட்

போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாத காலம் நடந்து கடந்துவிட்டது. குறிப்பாக அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்ட வேளையில் முன்னாள் பிரதமர் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த ராஜபக்ஷஇ அந்த வளாகத்தில் பாரிய கூட்டமொன்றை நடத்தினார். மகிந்த, ஜொனி, சிபி எல்லோரும் இருந்தார்கள்.

நிராயுதபாணியான அப்பாவிப் பொதுமக்களின் போராட்டத்திற்குச் சென்று தாக்குவதற்கு அவர்கள் கட்சிஆதரவாளர்களுக்கு உத்வே

### பேராசிரியர் ஆசு மாரசிங்க - முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்

இதைத் திட்டமிட்ட பிரதமரின் மகன் இன்று நாட்டை விட்டுவெளியேறியுள்ளார். இது தான் உண்மை நிலை. எனவே நாட்டில் உள்ள அனைத்து மக்களும் ஒன்றினைந்து வீதியில் இறங்கி இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கவேண்டும். அந்த உண்மையை கவனத்தில் கொள்ள வேண்டும்.’ என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஆசு மாரசிங்க தெரிவித்தார்.






## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை - 19

# மூத்த எழுத்தாளர் கலாபூஷணம் வேலுப்பிள்ளை நாகராஜா சந்திரகாந்தி (திருமலை.வீ.என்.சந்திரகாந்தி) கலைஞரின் சாதனைக் கலைப் பயணம்

**மானிடத்தின் சமூக, பண்பாட்டு, வரலாற்று விழுமியங்களின் பொக்கிஷமே இலக்கியம் ஆகும். இவை வாழ்வின் முறை நிலைக்களங்களை, தனிமனித சமூக ஏக்கங்களை, எதிர்பார்ப்புக்களை நம் மனக்கண் முன்னே நிலை நிறுத்தும் ஆற்றல் மிக்கவை. படைப்பாளியானவன் தனது படைப்பின் மூலமாக சமூகம் பற்றிய தன் எண்ணக்கருவை உணர்ச்சி வயமாகவும், ஏற்ற பாத்திரப் படைப்பினூடாகவும் இலக்கியச் சுவையினை தன்னுடன் இழுத்துச் செல்வதற்கு முயற்சி செய்கின்றான்.**




அவ் வகையில், 1946ம் ஆண்டு அச்சுவேலி எனும் இடத்தில் நாகராஜா இரத்தினம் தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார். தனது பாடசாலைக் கல்வியினை அச்சுவேலி கிறிஸ்தவ கல்லூரியிலும் (தற்போது மத்திய கல்லூரி) புத்தூர் சோமஸ் கந்தா கல்லூரியிலும் கற்று 1967ம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு தேர்வாகினார். கலைப்பிரிவில் முதலாம் ஆண்டு கற்றுக் கொண்டிருக்கும் போது அரச சிறாப்பர் சேவைக்கான போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று 1968ல் அரச நியமனம் பெற்ற இவர் மத்திய அரசில் 20வருட கால சிறாப்பர் சேவை, கிழக்கு மாகாணத்தில் 20வருட கால நிர்வாக உத்தியோகத்தர் சேவை, ஞநுனுழுவு மீபுழுவில் திட்ட முகாமையாளர் சேவை, நியாப் கசழதநஉவல் நிர்வாக உத்தியோகத்தர் சேவை என பணி புரிந்து 2006ல் ஓய்வு பெற்றார்.


சிறுவயதிலேயே இலக்கிய மாத சஞ்சிகைகள், நாவல்கள் வாசிப்பதில் ஆர்வம் காட்டிய இவருக்கு மாணவப் பருவம் முதலே எழுத வேர் விடத் தொடங்கியது. கொழும்பு பல்கலைக்கழகத்தில் 'ராஜ்' நாடக மன்றத்தில் இணைந்து செயற்பட்டமையே இவரின் இலக்கிய ஆர்வத்திற்கு முதலில் வித்திட்டது எனலாம். அதன் தொடர்ச்சியாக ஞானம் இலக்கிய சஞ்சிகை, வீரகேசரி, தினக்குரல், மலைமுரசு வார மலர்களுக்கும் தனது எழுத்தாக்க படைப்புக்களை எழுதத் தொடங்கி இலக்கிய உலகில் காலடி எடுத்து வைத்து சிறுகதை, நாவல், கட்டுரை என பல் வகைப்பட்ட துறைகளிலும் படைப்புக்களை தமிழ் இலக்கண நெறிமுறைகளைப் பின்பற்றி தெளிவான, சிந்தனை மிகுந்த, கருத்தாழம் கொண்டதாக படைக்கத் தொடங்கி இன்று விருட்சமாக உயர்ந்து காணப்படுகின்றார். இலக்கியத் துறையில் முன்னோடிகளில் ஒருவராக திகழும் இவர் இதுவரையில் நான்கு சிறுகதை தொகுப்புக்களையும், ஒரு நாவலையும், மூன்று வாழ்வியல் பகிர்வு நூல்களையும் எழுதி வெளியிட்டு நாடறிந்த எழுத்தாளராக மிளிர்ந்து காணப்படுகின்றார். தனது திறமையான எழுத்துக் கூர்மையால் வீரகேசரியில் பிரசுரமான 'சம்ஹாரம்' சிறுகதை 'இரசிகமணி கனக செந்திகதா' விருதை பெற்றது. திருக்கோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகம் நடாத்திய சாஹித்திய விழா 2002ற்கான சிறுகதைப் போட்டியில் முதல் தடவையாகப் பங்குபற்றி 'மலரத்துடிக்கும் மொட்டு' என்ற சிறுகதை முதற் பரிசைப் பெற்றது. 2010ல் அரச விருதான 'கலாபூஷணம்' விருதும், 2012ல் கிழக்கு மாகாண முதலமைச்சர் விருதும் இவரின் கரங்களைத் தழுவிச் சென்றது.

இவ்வாறாக, சமூகத்திற்குத் தேவையான கால சூழ்நிலைக்கேற்ற விடயங்களை தைரியமாக, நிதானமாக, மாறுபட்ட கோணத்தில் சிந்தித்து தனது ஒவ்வொரு இலக்கியப் படைப்புக்களும் சமூகத்தை பிரதிபலித்து வாசகர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் புதிய பரினாமத்தை ஏற்படுத்தி தனக்கென்று வாசகர் கூட்டத்தை தன்னடக்கமாகக் கொண்டு வலம் வந்து கொண்டிருக்கின்றார் என்பது பதிவுக்குரிய விடயமாகும். இவ்வாறாக இலக்கியத்துறைத் தவிர தமிழ், சிங்களம், ஆங்கிலம் மும்மொழி தேர்ச்சியும், எழுத, வாசிக்க, பேசும் ஆற்றலும் இவரிடம் மிகையாக உள்ளது. அளவான பேச்சும், ஆழமான சிந்தனையும், மனித நேயப் பண்பும், நிறைந்த ஆற்றலும் கொண்ட சிறந்த சமூக சேவையாளருமாவார்.

இவ்வாறாக தமிழ்ப் புலமை கொண்டு பல துறைகளிலும் சலிக்காது, அர்ப்பணித்து ஈடுபட்டு தான் வாழும் திருக்கோணமலை மண்ணைப் பெருமைப் படுத்தி தனக்கென்ற ஓர் அடையாளத்தை வசீகரித்து இன்று வரை இலக்கியத் துறையில் வேகத்துடனும், சுறுசுறுப்புடனும் ஈடுபட்டு வருபவரான கலாபூஷணம் வேலுப்பிள்ளை நாகராஜா சந்திரகாந்தி (திருமலை.வீ.என்.சந்திரகாந்தி) கலைஞர் சுபீட்சம் நிகழ்நிலை பத்திரிகையின் திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை என்ற பகுதிக்கு வழங்கிய செவ்வி காணலை இங்கு காணலாம்.

**? இலக்கியத் துறையில் உங்களுக்கு ஏற்பட்ட ஆர்வம் பற்றியும் அதனூடாக ஆரம்பம் முதல் இன்று வரையான பயணம் குறித்து?**

சிறுவயதிலேயே தமிழ்நாட்டு இலக்கிய மாத சஞ்சிகைகள் மற்றும் நாவல்கள் எனது கைக்கு எட்டின. ரஷ்ய நாவல்கள் சிலதும் வாசிக்க கிடைத்தது. ரஷ்ய



தமிழ் மொழிபெயர்ப்பு நாவல்கள் சில எனது இலக்கிய ஆர்வத்தை தூண்டின. அதனால் மாணவ பருவம் முதலே எழுத வேண்டும் என்ற ஆர்வம் என்னுள் முகிழ்த்தது. கொழும்பு பல்கலைக்கழக அனுமதி பெற்று சென்றதும் 'ராஜ்' நாடகமன்றத்தில் இணைந்து செயற்பட்டமை எனது இலக்கிய ஆர்வத்துக்கு முதலில் வித்திட்டது. சிறுகதை வடிவம் எனக்கு பிடித்ததனால் தினமுரசுக்கு நிறையவே எழுதினேன். அவை வாசகர்களின் கவனத்தை ஈர்த்தன.'ஞானம்' இலக்கிய சஞ்சிகையின் முதலாவது இதழுக்கு ஆசிரியர் எனது சிறுகதை ஒன்றை விரும்பி கேட்டார். 'ஸ்திரீ இலட்சணம்' சிறுகதை ஒரே நாளில் என்னால் எழுதப்பட்டு 'ஞானம்' முதலாவது இதழில் பிரசுரமானது அதை தொடர்ந்து வீரகேசரி, தினக்குரல் வாரமலர்களுக்கு கதைகளை அனுப்பி வைத்தேன். அவை உடனுக்குடன் பிரசுரமாகின. வீரகேசரியில் பிரசுரமான 'சம்ஹாரம்' சிறுகதை 'இரசிகமணி கனக செந்தி கதாவிருதை' பெற்றது. கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்



தால் அண்மையில் வெளியிடப்பட்ட 'கிழக்கின் நூறு சிறுகதைகள் தொகுப்பில் இக்கதையும் இடம்பெற்றது. யாழ்ப்பாணம் வடமராட்சி மக்களின் வாழ்வாதாரமான புகையிலை நாற்று நடுதலை மையப்படுத்தியும் சொத்துக்கள் தகராறை ஒட்டியும் என்னால் எழுதப்பட்ட 'சொரியல்' சிறுகதை தினக்குரலில் பிரசுரமானதுடன் ஆசிரிய பீடம் அதனை விதந்துரைத்ததுடன் 'இந்தியன் வங்கி'காசோலை ஒன்றையும் அனுப்பி கௌரவித்தது. திருக்கோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்தால் 2002ல் நடாத்தப்பட்ட சாஹித்திய விழா போட்டியிலும், திருக்கோணமலை மாவட்ட இலக்கிய விழா போட்டியிலும் என்னால் படைக்கப்பட்ட 'மலரத்துடிக்கும் மொட்டு' சிறுகதை முதற்பரிசை தட்டிக்கொண்டது. சிறுகதை இலக்கியத்திற்கு அப்பால் 2014,2015,2016ம் ஆண்டுகளில் எனது கவனம் வாழ்வியல் சம்பந்தப்பட்ட அனுபவங்களை பகிர்வு செய்வதில் திரும்பியது. மலைமுரசு வாரமலருக்கு 130வாரங்கள் தொடர்ச்சியாக ஆக்கங்களை மக்களுக்கு பயன்படும் வகையில் அனுப்பியமை எனக்கு பெரும் மனத்திருப்தியை அளித்தது. வீரகேசரி,சுடர்ஒளி,மாத சஞ்சிகைகள் ஆகியவற்றிலும் எனது கட்டுரைகள் பிரசுரமாகின. இவ்வாறாக எனது இலக்கியத்துறைப் பயணம் தொடர்ந்து செல்கின்றது.


**? இலக்கியத் துறையில் நீங்கள் இதுவரையில் எழுதி வெளியிட்ட நூல்கள் பற்றிய விபரம்?**

இலக்கியத் துறையில் நான் இதுவரையில் நான்கு சிறுகதை தொகுப்புக்களையும,; ஒரு நாவலையும் மூன்று வாழ்வியல் பகிர்வு நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளேன். 2022ம் ஆண்டு எனது முதலாவது வெளியீடான 'ஸ்திரீ இலட்சணம்'சிறுகதை தொகுப்பினை வெளியிட்டேன். இத் தொகுப்பில் பன்னிரெண்டு சிறுகதைகள் உள்ளடங்கியுள்ளன. ஞானம்,தினமுரசு,தினக்குரல் ஆகியவற்றில் பிரசுரமான தரமான சிறுகதைகள் இவை. இரண்டாவது வெளியீடாக 2003இல் 'தொடரும் தலைமுறைகள்' என்ற சிறுகதை நூலினை வெளியிட்டுள்ளேன். இத் தொகுப்பில் நான் தினமுரசு வாரமலருக்கு எழுதிய தெரிவு செய்யப்பட்ட 19 சிறுகதைகள் உள்ளடங்குகின்றன. எனது மூன்றாவது வெளியீடாக 'மீண்டும் வசந்தம்' முழுநீள நாவலாகும். இருபத்திநான்கு அத்தியாயங்களை கொண்டது. பற்பல சம்பவங்களின் நேரடி தொகுப்பு, பல சுவாரசியங்களை உள்ளடக்கியது. பலரால் பாராட்டப்பட்ட இதன் முதற் பதிப்பு 2004லும், இரண்டாவது பதிப்பு 2005லும் செய்யப்பட்டது. அடுத்து 'இந்திரர்கள் நாடும் அகலிகைகள்'சிறுகதை தொகுப்பு எனது நான்காவது வெளியீடாகும். பன்னிரு சிறுகதைகளை உள்ளடக்கியது. எனது எழுத்தின் உச்சத்தில் வெளியாகிய நூல் இது. 2016ல் எனது 5ஆவது வெளியீடான வாழ்வியல் அனுபவ பகிர்வு (பாகம்-1) கட்டுரைகள். இது 30அனுபவம் சார் கட்டுரைகளை உள்ளடக்கியது. ஆறாவது வெளியீடாக 2017ல் வாழ்வியல் அனுபவபகிர்வு (பாகம்-ii). இது 31கட்டுரைகளை உள்ளடக்கி பிரசுரமாகிறது. ஏழாவது வெளியீடான 'நிகழ்காலத்தில் வாழ்தல்' எனது பன்னிரு சிறுகதைகளை உள்ளடக்கி 2019ல் வெளியானது. பல பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் பிரசுரமாகி நூல்வடிவம் பெறாமல் பல சிறுகதைகள் எஞ்சி நிற்கின்றன. எனது எட்டாவதும் இறுதியுமான நூல் வெளியீடு 2020ல் 'வாழ்வியல் அனுபவ பகிர்வு' (பாகம்-iii) இத் தொகுப்பு 30கட்டுரைகளை உள்ளடக்கியுள்ளது.

**? இலக்கியத் துறை தவிர வேறு துறைகளில் உங்களது பங்களிப்பு குறித்து?**

ஆங்கிலம், சிங்களம், ஆகிய மொழிகளில் எனக்கு உள்ள பாண்டித்தியத்தை பயன்படுத்தி மாணவர்களுக்கு மேலதிக வகுப்புக்கள் எடுப்பதுண்டு. நான் சேவையாற்றிய அலுவலகங்களில் (பொறியியற் சேவைகள் அமைச்சு, மாகாண திறைசேரி, முகாமைத்துவ பயிற்சி திணைக்களம்,) ஆங்கில சிங்கள கடித வரைபுகளை தனி ஒருவனாக மேற்கொண்டுள்ளேன்.

அரச துறையிலிருந்து 2006ல் ஓய்வு பெற்றதை தொடர்ந்து 'செடொட்' என்ற புழுவில் இணைந்து சமூக சேவைகள் பல புரிந்துள்ளேன். மக்களுக்கு சுயதொழில் பயிற்சிகளை வழங்கி 2007ல் இந்துக் கல்லூரிக்கு முன்பாக தொழில்சந்தை ஒன்றை வெற்



றிகரமாக நடாத்தினேன். திட்ட முகாமையாளராக இருந்து ரு.ஒ.யுனைன் நிதியீட்டத்துடன் மக்களுக்கு வாழ்வாதார அனுசரணைகளை வழங்குவதன் மூலம் இனங்களுக்கிடையேயான நல்லுறவினை மேம்படுத்தலே இச் செயற்றிட்டமாகும். இதன் பொருட்டு மும்மொழிகளிலும் ஒரு விபரண நூலை வெளியிட்டேன். அதனை பாராட்டி ரு.ஒ.யுனை எனக்கு 40,000 ஸ்ரீ ரூபாய் பரிசை வழங்கி கௌரவித்தது. திருக்கோணமலை புதிய பேரூந்து நிலையம் ரு.ஒ.யுனை நிதி வழங்கலுடனும் எனது முகாமைத்துவத்துடனும் கட்டப்பட்டதே! இதனைத் தொடர்ந்து 'நியாப்'நிறுவனம் எனக்கு நிர்வாக உத்தியோகத்தராக நியமனம் வழங்கியது. அங்கு மூன்று வருட காலம் சேவையாற்றினேன். விவசாய நடவடிக்கைகளுக்கு எனது பெரும் பங்களிப்பை வழங்கினேன். இவ்வாறாக பல.. விரிவு அஞ்சி சொல்வதைத் தவிர்க்கிறேன்.

**? ஒரு கலைஞராக உங்களது கலைச்சேவை திருக்கோணமலை மாவட்டத்தில் எவ்வாறு உள்ளது?**

ஒரு கலைஞனாக எனது கலைச்சேவை திருக்கோணமலை மாவட்டத்தில் திருப்திகரமாக உள்ளது. நான் ஒரு கலைஞன் என்பதை காட்டிலும் பொறுப்புக்களை அதிகம் சுமக்க வேண்டிய அரச அலுவலராக நிறைய கடமைகளை ஆற்ற வேண்டியிருந்தது. அதனால் அரச சட்ட திட்டங்களை தெரிந்து வைத்துக்கொண்டே ஏனைய அலுவலகர்களுடன் பழக வேண்டியிருந்தது. நான் ஓய்வு பெற்றபோது ஓய்வூதியம் மட்டுமன்றி நுகரு இ நுவுரு. இரண்டும் மேலதிகமாக கிடைத்தமைக்கு காரணம் எனது திறமையும் முயற்சியுமே!திருக்கோணமலையில் ஒரு நூல் வெளியிட்டை செய்வது வேறு நூல் வெளியிட்டுக்கு போவது வேறு! இரண்டுமே ஒரு சோர்வு நிலையிலேயே உள்ளது. நூல் வெளியீடுகளுக்கு தலைமை தாங்குதல், ஏற்பாடு செய்தல,; சிறுகதை ஆக்கம் பற்றி மாணவர்களுக்கு கற்பித்தல் ஆகிய செயற்பாடுகளில் இயன்றவரைக்கும் பங்குபற்றுவதுண்டு. நூல் வெளியீடுகளுக்கு சமூகமளிக்க முடியாத நிலைகளிலும் என்னை நாடி வருபவர்களது நூல்களை விலை கொடுத்து பெற்றுக்கொள்வதில் நான் பின் நிற்பதில்லை.





தொகுப்பு :-
திருமலை தட்சாயினி ஞானசங்கரன்

மிகுதி 10 ஆம் பக்கம் பார்க்க...

## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை - 19

# மூத்த எழுத்தாளர் கலாபூணம் வேலுப்பிள்ளை நாகராஜா சந்திரகாந்தி (திருமலை.வீ.என்.சந்திரகாந்தி) கலைஞரின் சாதனைக் கலைப் பயணம்

**? திருக்கோணமலை மாவட்டத்தில் மூத்த கலைஞர்களுக்கான வரவேற்பும் அங்கீகாரமும் எவ்வாறு உள்ளது?**

திருக்கோணமலையில் மூத்த கலைஞர்களுக்கான வரவேற்பும், அங்கீகாரமும் நன்றாகவே உள்ளது. அண்மையில் ஒரு சிறுகதை எழுத்தாளருக்கு கலாபூஷணம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. அது அவரது குறுகிய எழுத்து வீச்சுக்கு கிடைத்த வரவேற்பு.

**? இன்றைய சமுதாயத்தில் ஒரு எழுத்தாளன் புத்தகம் ஒன்றை எழுதி வெளியிடுவதிலுள்ள சவாலாக நீங்கள் நினைப்பவை?**

இன்று நூல் ஒன்றினை எழுதி வெளியீடு செய்வதென்பது பெரும் சவாலான விடயமாகவே உள்ளது. சமுதாயத்தில் வாசிப்பு திறன் முற்றாக அருகிவிட்டது. அதற்கான பழியை வாசகர்கள் மேலும் போட முடியாது. ஒரு நூலை வாசிப்பதற்கு தேவை இருக்க வேண்டும், ஆசை இருக்க வேண்டும். 'இலகுவாக பணம் சம்பாதிப்பது எப்படி'? என்ற தலைப்பில் உள்ள நூலை பலரும் வாசிக்க விரும்புவர். 'முழு நீள நாவல் 'இ '100 சிறுகதைகள்'என்ற தலைப்பிலான நூல்களை யார் தான் காசு கொடுத்து வாங்குவர்? இதைத் தவிர சிறுகதைகளை எடுத்தால் அனைத்து கருக்கள் தளங்களிலும் ஆக்கங்கள் வெளிவந்து விட்டன. சிறுகதை இலக்கியம் செத்து விட்டது. என எனது நண்பர் ஒருவர் கூறினார். அடுத்து கவிதை நூல்களை எத்தனை பேர் புரிந்துகொண்டு விரும்பி வாசிக்கின்றார்கள்? நிற்க நூல்களை அச்சிடும் செலவு உச்சத்தை தொட்டுவிட்டது. நூல் வெளியீட்டின் போது சிறிது பணம் சேரும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. நூலின் பெறுமதிக்கு குறைவாகவே 'கவர்கள்' , விழும் பணம் இல்லாமல் பல 'கவர்கள்' இருந்ததாக பல எழுத்தாள நண்பர்கள் எனக்கு கூறியிருக்கின்றார்கள். பற்பல பிரச்சனைகளையும், அவமானங்களையும் எதிர்பார்த்தே நூல் வெளியீட்டை செய்ய வேண்டிய காலம் இது!

**? இன்றைய சமூகத்தில் இலக்கியத் துறை மீதான பார்வை எவ்வாறு உள்ளது?**

இன்றைய நிலையில் சமூகத்தில் இலக்கியத் துறை மீதான பார்வை நன்றாகவே உள்ளது. இளைஞர்களின் ஆர்வமும,; கணனி பயன்பாடும் அதற்கு காரணம் எனலாம். தவிர மூத்த எழுத்தாளர் மீது அவர்கள் வைத்திருக்கும் மதிப்பும் அவர்களது எழுத்துக்கள் மேலான தேட்டமும் பாராட்டுக்குரியது. மேலும் படைப்புக்களை தேடியலைய வேண்டிய தேவை இல்லை. எவ்வகை படைப்புக்கடியும் கணனியிலேயே வாசித்து இரசிக்க முடியும். பத்திரிக்கைகளில், சஞ்சிகைகளில் வாராவாரம் பிரசுரமான எனது 130 வாழ்வியல் கட்டுரைகள் தொடர்ச்சியாக முகநூல் பக்கத்தில் பதிவாகியிருக்கின்றன.

**? இத்துறையில் நீங்கள் பெற்ற சாதனைகள், விருதுகள் குறித்து?**

இலக்கியத் துறையில் நான் பல சாதனைகளை புரிந்ததுடன் பல விருதுகளையும் பெற்றுள்ளேன். எனது முதலாவது சிறுகதை தொகுப்பான 'ஸ்தீரி இலட்சணம்' 2002ல் வெளியீடு செய்யப்பட்ட போது அப்போது பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் உப பணிப்பாளராக இருந்தவரும,; மேடையில் நூல் விமர்சனம் செய்தவருமான திருமதி.ஸ்ரீ தேவியினால் 'நான் ஆயிரம் சிறுகதைகளுக்கு மேல் வாசித்திருக்கின்றேன். ஆனால் இந்த தொகுப்பில் உள்ள சிறுகதைகள் என்னை வியக்க வைக்கின்றன'என்று பாராட்டி பேசினார். திருக்கோணமலை பிரதேச செயலகத்துக்கு நான் 2002ல் முதன் முறையாக சமர்ப்பித்த 'மலரத்துடிக்கும் மொட்டு'முதல் இடத்தை பிடித்தது. அதே கதை திருக்கோணமலை மாவட்டத்தில் இலக்கிய விழா போட்டியிலும் முதலாம் இடத்தை பெற்றது. எனது 'புதிய வெள்ளிப்பாதசரம்'சிறுகதை முது பெரும் எழுத்தாளர் வ.இராசையா அவர்களால் டிசம்பர் 2001ல் ஞானம் இதழில் புகழ்ந்து எழுதப்பட்டது. இலங்கையர் கோனுக்கு புகழைத் தேடித்தந்த 'வெள்ளிப்பாதசரம்' கதை'புதிய வெள்ளிப்பாதசரம்' என்ற புதிய புனைவுடன் எனக்கு புகழை தேடித்தந்தது.

திருக்கோணமலையில் 'இரசிகமணி கனக செந்தில் கதாவிருது' பெற்றவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். எனது சம்காரம் சிறுகதையை 200%ல் வீரகேசரியில் வாசித்த தெரிவுக் குழுவினர் அவ்வருடத்திற்கான சிறந்த ஏழு கதைகளில் ஒன்றாக அதை தெரிவு செய்திருந்தனர். கொழும்பு தமிழ் சங்கத்தில் அதற்கான பாராட்டுப் பத்திரத்தையும் பரிசையும் எனக்கு வழங்கிய 'செங்கையாழியான்' அவர்கள் என்னருகே வந்து 'தெரிவுக் குழுவில் உள்ள ஏழு பேரும் ஏகமனதாக தெரிவு செய்த சிறுகதை உங்களுடையதே' என்று கூறி பாராட்டியது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி அளித்தது. நான் அரச தொழில் நிமித்தம் 1968முதல் இலங்கையின் பல பிரதேசங்களிலும் பணியாற்றியிருக்கின்றேன். எனது பல சிறுகதைகள் அவற்றை தளமாக கொண்டு சிறப்பு பெற்றதுடன் வாசகர்களுக்கு புதுப்புது அனுபவங்களை தந்துள்ளது. 'காதலே மௌனமானால்' மட்டக்களப்பையும், 'சின்னஞ்சிறுசுகள்' மற்றும் 'ஸ்திரீ இலட்சணம' கொழும்பையும், 'அவள் வித்தியாசமானவள்' 'வழித்துணையை இழந்தவர்கள்', திருக்கோணமலையையும், 'சொரியல்' யாழ்ப்பாணத்தையும் 'சுடுபவனாய் சுடுபடுபவனாய்' மின்னேரியாவையும், 'அக்கினிகுஞ்சுகள்'வன்னியையும் தளமாக கொண்டு உருவான சிறுகதைகளாகும். இவைத்தவிர, யாழ் பல்கலைகழக மாணவி செல்விகே.விஜயசுதா தனது இறுதியாண்டு கலைமாணி தேர்வின் ஒரு பகுதியை நிறைவேற்றும் முகமாக எனது மூன்று சிறுகதை தொகுப்புக்களை ஆய்வு செய்து இரண்டாம் வகுப்பு உயர் பிரிவில் சித்தியடைந்துள்ளார்.






கிடைக்கபெற்ற விருதுகளாக, திருக்கோணமலை மாவட்ட நூலக சங்கத்தினர் வாசிப்பு வாரத்தை முன்னிட்டு நூலசிரியர் என்ற வகையில் என்னை 2008ல் விருது வழங்கி கௌரவித்தனர். 2010ல் நடைபெற்ற அரச சாகித்திய விழாவில்'கலாபூஷணம்' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டேன். 2012ல் கிழக்கு மாகாண முதலமைச்சர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டேன். 2014ல் திருக்கோணமலை நகர முதல்வரால் 'கலாவித்தகர் விருது' வழங்கி கௌரவிக்கப்பட்டேன்.

**? திருக்கோணமலையில் இளம் கலைஞர்களின் இலக்கியத்துறை மீதான ஈடுபாடு எங்வாறு உள்ளது?**

திருக்கோணமலையில் இளங்கலைஞர்களின் இலக்கியத்துறை மீதான ஈடுபாடு பாராட்டும் வகையிலேயே உள்ளது. எனினும் கவிதை எழுதுவதில் மட்டுமே, தங்கள் கவனத்தை செலுத்தாமல் சிறுகதை, நாவல், கட்டுரை ஆக்கம் போன்ற துறைகளிலும் தங்கள் திறமையை விஸ்தரிக்க வேண்டும். இலக்கியம் என்பது மக்களின் பயன்பாட்டுக்கு என்பதை மனதில் கொண்டால் சரி.

**? ஒரு மூத்த கலைஞராக திகழும் நீங்கள் திருக்கோணமலை மாவட்டத்தில் இலக்கிய துறையில் உள்ள இடர்பாடாக கருதுவது?**

திருக்கோணமலையில் இலக்கிய துறையில் உள்ள முக்கிய இடர்பாடுகளாக ஒரே ஒரு தமிழ் சங்கம் என்று இல்லாமை. கலைஞர்களிடையே ஒற்றுமை இன்மை. நிறையவே பாரபட்சம் காட்டப்படுதல். தாங்களே தங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்;தலும், மற்றவர்களுடைய தகுதியை அடையாளம் காணாமையும், நூல் வெளியீடுகளுக்கு வருகை தராமையும், ஏனையவர்களின் நூல்களை வாசிக்காமையும், கொள்வனவு செய்யாமையும், நல்ல அச்சு இயந்திர வசதி இன்மையும் ஆகும்.

**? எதிர்காலத்தில் உங்களது படைப்புக்களாக வர விருப்பவை பற்றி?**

எதிர்காலத்தில் நான் ஒரு ஆங்கில பேச்சு இலக்கண நூலை வெளியிட எண்ணியுள்ளேன். இதற்கான எனது முயற்சி முற்றும் பெற்றுள்ளது. அதனை சந்தைப்படுத்துவது பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கின்றேன்.







**? இன்றையகால கட்டத்தில் இலக்கியத்தின் தேவை எவ்வாறு உள்ளது?**

இன்றைய கால கட்டத்தில் இலக்கியத்தின் தேவை அரிதாகவே உள்ளது. கணனியின் வரவால் அது திசை திரும்பியுள்ளதென்பதே உண்மை.

**? சுய ஆக்க இலக்கிய படைப்புக்களைப் படைக்கும் ஓர் எழுத்தாளன் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளாக நீங்கள் கருதுவது?**

சுய ஆக்க இலக்கியம் படைக்கும் ஓர் எழுத்தாளன் யதார்த்தத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அவன் எழுதும் தளங்கள் பற்றியும், பேச்சு வழக்கு பற்றியும் நன்கு புரிந்து கொண்டு செயற்பட வேண்டும். பழமொழிகள், எடுத்துக் காட்டுக்கள் ஒவ்வாது.

**? நமது மண்ணின் தனித்துவமிக்க பாரம்பரிய கலைகள் மருவியடைந்து செல்லும் நிலை காணப்படுகின்றது. அது குறித்து?**

நமது மண்ணின் தனித்துவ மிக்க பாரம்பரிய கலைகள் மருவியடைந்து செல்லும் நிலைமைக்கு பிரதான காரணம் சமூக மாற்றம் தான். கிராம மட்டத்தில் இருந்த சமூகம் நகர மட்டத்துக்கு மாறும் பொழுது நாகரீக வளர்ச்சிக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. அங்குதான் தனித்துவமிக்க பாரம்பரியம் மருவியடைந்து செல்கிறது எனலாம். முன்னரெல்லாம் தனித்துவ மிக்க பாரம்பரிய கலைகள் சமூகத்துக்கு பெருமை தேடித்தந்தன. இப்போது தங்களுக்குரிய



சில பாரம்பரிய கலைகள் தங்களுக்கு சொத்தமானது என்பதை காட்டி கொள்ளவே மக்கள் தயங்குகிறார்கள். இப்படியான கலைகளை எதிர்வரும் காலங்களில் பல்கலைக் கழக மட்டத்திற்கு எடுத்துச் செல்வதொன்றே சாலச் சிறந்த வழி எனக் கொள்ளலாம்.


**? நிறைவாக, மூத்த கலைஞராக உங்களது அனுபவத்தினூடாக சாதிக்க நினைக்கும் இளம் தலைமுறையி;னருக்கு கூற விரும்புவது?**

இலக்கியத் துறையில் சாதிக்க விரும்பும் இளம் தலைமுறையினர்கள் பிரதானமாக வாசிப்பு பழக்கத்தை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். அதிலும் பிற மொழி இலக்கியங்களை ஓரளவுக்காயினும் கற்றல் நல்லது. ரஷ்ய மொழி தமிழ் மொழி பெயர்ப்பு நாவல்கள் எனது இலக்கிய ஆர்வத்தை அதிகம் தூண்டின. யதார்த்தத்தை புரிந்து கொண்டு இலக்கியம் படைக்க வேண்டும். மொழி ஆற்றலை அதிகம் வளர்த்துக் கொள்ள வேண்டும.; கவிதை எழுத விரும்பினால் யாப்பு இலக்கணத்தை கற்றல் அவசியம் சிறுகதையில் பல நுட்பங்கள் இருக்கின்றன. அவற்றை தெரிந்து கொண்டு எழுத வேண்டும். நாவல்கள் மக்களுக்கு வேண்டிய அனுபவங்களை அள்ளிச் சொரிய வேண்டும். தமிழ் நாட்டு சமூக நாவல்கள், சரித்திர நாவல்கள் எமக்கு பல ஆற்றல்களை வழங்க வல்லன.

**இவ்வாறாக நம் திருக்கோணமலை மண்ணிற்கு தனது எழுத்து இலக்கியத் துறை மூலம் பெருமையையும், புகழையும் பெற்றுத் தந்த மூத்த கலைஞரான இவர் மென்மேலும் எழுத்திலக்கியத் துறையில் பல படைப்புகளைப் படைத்து உலகளவில் கலைச்சேவையாற்றி பல விருதுகளையும், பாராட்டுக்களையும் குவித்து தேகாரோக்கியத்துடன் இருப்பதற்கு பிரார்த்திப்பதோடு இப் பணித் தொடர மனதார வாழ்த்துகின்றேன்.**

**தொடரும் கலைஞர்களுக்கான தேடலின் பயணத்தோடு**

# வானொலிமாமா மாஸ்டர் சிவலிங்கம் ஐயாவுடன் ஒரு சந்திப்பு



சிவலிங்கம் மாமாவை நினைக்கும் ஒவ்வொரு முறையும் அவருக்குச் சிறுவர்களால் சொல்லப்படும் வணக்கம் மாமா வும் அதற்கு அவர் வணக்கம் மருமக்களே என அன்போடு முறைகூறிச் சொல்லும் வணக்கமுந்தான் என் காதின் காற்றிடைவெளிகளை மீண்டும் மீண்டும் நிரப்பிக் கொள்ளும். அத்துடன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் சிறுவர் மலர் நிகழ்ச்சியில் வானொலிமாமா கதைகேட்க நாம் மாலை 5.30 மணிக்கெல்லாம் சம்மாணம் போட்டுத் தவங்கிடந்த காலங்களையும் அது நினைவுபடுத்த மறப்பதில்லை.

மாஸ்டர் சிவலிங்கம் என்றும், வானொலி மாமா எனவும் அறியப்பெற்ற இவர், நான் உட்பட அப்போதிருந்த அனைத்து இலங்கையர்களுக்கும் மாமாதான். மட்டக்களப்பு மண் எமக்களித்த முதுசொம் அவர். அவரை எழுத முற்படும் போதே என்னுள் ஒருவித அதிர்வு குடிகொண்டிருந்தது. ஆரம்பித்த இந்த நொடிவரை அந்த அதிர்வின் எதிரொலியாய் பலமுறை மேனி சிலிர்த்திருக்கிறது. உலகப் பிரபலமான கதைசொல்லியை நேர்காண எனக்குக் கிடைத்த பொன்னான சந்தர்ப்பத்தை எண்ணி. என்று சொல்வதை விட நான் சிறுவனாய் இருந்தபோது வானொலியில் கேட்ட கதைகளின் குரலுக்குச் சொந்தக்காரரை, நான் கனவிலும் நினைத்திராதபடியான ஒரு சந்திப்பை நிகழ்த்த இருப்பதை எண்ணித்தான் என் உடம்பின் இதுவரை பெயரிடப்படாத அத்தனை இரசாயனங்களும் ஒன்றுசேர்ந்து அந்த அதிர்வை உருவாக்கியிருந்திருக்க வேண்டும்.

கதைகளின் நடுவே வாழைப்பழம் உண்ணும் காட்சியை மாமா கூறும் போது, எம்மையும் அத்துமீறி உமிழ்நீர் சுரந்து கொள்வதையும் இராஜகுமாரன் குதிரையில் வரும் காட்சிகளில் மாமாவின் டயரியும் விரல்களும் பேசிக்கொள்ளும் பாஷையின் ஒலி என அறியாமல் உண்மைக் குதிரையின் குழம்பொலி என ஏமார்ந்த கணங்களையும் இலகுவில் மறந்து விட முடியுமா என்ன?

நவீன இலத்திரனியல் சாதனங்களின் வருகைக்குமுன் வானொலி ஒன்றே மிகப்பெரிய ஜனரஞ்சக ஊடகமாக இருந்த அந்தக் காலத்து உணர்வுகளை இக்காலச் சிறுவர்களால் அவ்வளவு இலகுவாக உணர்ந்துகொள்ள முடியாதென்பதற்காகவே நான் இத்தனை வரிகளையும் பயன்படுத்த வேண்டியாயிற்று. நிச்சயமாக அப்படியொரு வசந்தகாலமும் இப்படியொரு கதைசொல்லி மாமாவும் இனி எந்தச் சிறுவர்களுக்கும் வாய்க்கப்போவதில்லை.

இலங்கை, இந்தியா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் வானொலி, தொலைக்காட்சி மற்றும் எண்ணிலடங்கா மேடைகள்; என 50 வருடக் கதைசொல்லல் அனுபவமும்;, சிறுவர் எழுத்தாளர் (சிறுவர் கதை மற்றும் சிறுவர் பாடல் ), 144 மேடைகள் கண்ட மிகச்சிறந்த வில்லுப் பாட்டுக் கலைஞர்;, நகைச்சுவைப் பேச்சாளர், ஆன்மீகச் சொற்பொழிவாளர், சிறந்த நடிகர், ஓவியர், பத்திரிகையாளர், எனப் பல்வேறு திறன்களைத் தன்னகத்தே கொண்டவரும் கிருபானந்தவாரியார் அவர்களினால் அருட்கலைத்திலகம் எனவும், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களால் நகைச்சுவைக்குமரன் எனவும் பண்டிதர் வீ.சி.கந்தையா அவர்களால் வில்லிசைச்செல்வன் எனவும் அமைச்சர் செ.இராசதுரை அவர்களால் வில்லிசைச்செல்வர் எனவும் காத்தான்குடிப் பொதுமக்களால் கனித்தமிழ்க் கதைஞன் எனவும் மட்டக்களப்பு இந்து சயம அபிவிருத்திச் சங்கத்தினால்; கலைக்குரிசில் எனவும் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தினால் சிறுவர் இலக்கியச் செம்மல் எனவும் இங்கிலாந்தில் இயங்கும் ஆக்ஈகு எனும் அமைப்பினால் பொன் முடிச்சுக் கொடுத்து கலைமாமணி எனவும் கிழக்குப் பல்கலைக் கழகத்தினால் இலக்கிய முதுமாணி எனவும் பற்பல பட்டங்கள் பெற்றவரும், 1984 - 1991 ஆம் ஆண்டுகளில் சிறுவர் இலக்கியத்துக்கான வடக்குக் கிழக்கு மாகாண சாகித்திய மண்டலப் பரிசு, மற்றும் 2013 இல் அன்பு தந்த பரிசு எனும் சிறுவர் படைப்புக்காக மட்டக்களப்பு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் தமிழியல் விருது, இலங்கை அரசின் உயர்விருதுகளில் ஒன்றான 'கலாபூசணம் விருது என்பவற்றைத் தனதாக்கிக் கொண்டவருமான மாஸ்டர் சிவலிங்கம் மாமாவின் ஆளுமையையும் அத்தனை துறைகளிலும்; அவர் கூறிய மிகச் சுவாரசியமான சம்பவங்களையும் நிச்சயமாக என்னால் இரண்டு மூன்று பக்கங்களில் விபரித்துவிட முடியாது. இது கொஞ்சம் நீண்டதாகவே இருக்கப் போகிறது என முன்னரே சொல்லிவிடுகின்றேன்.

ஐயாவைச் சந்திப்பதற்கு மாலை 4 மணிக்கு அனுமதி வாங்கியிருந்தோம். என் இத்தனைகால வாழ்வில் எத்தனையோ நான்கு மணிகளைச் சந்தித்திருக்கிறேன். ஆனாலும் மாஸ்டர் சிவலிங்கம் அவர்களை சந்திக்கப் போகும் அன்றைய நான்கு மணியை நான் சந்திக்கும் தருணங்கள் மட்டும் என்னவோ விபரிக்க முடியாததாக இருந்தது. என் உணர்வுகளுக்கு இறக்கை முளைத்துவிட்டதாகவும் கடிகார முட்கள் கடிவாளமிடப்பட்டிருந்ததாகவும் உணர்ந்தேன். நான்கு மணிவரை காத்திருக்கும் சக்தி மெதுவாக என்னை விட்டு விலகிப் போனது. மாஸ்டரைச் சந்திக்க என்னுடன் நண்பன் டனிஸ்க்கரனும் வருவதாக இருந்தார். அதனால் அவருக்கு நாம் 30 நிமிடம் முந்திச் செல்வோம் என்ற தகவலை அறியப்படுத்தியிருந்தேன். மாஸ்டரைச் சந்திக்க எனக்கிருந்த அதே ஆவலும் எதிர்பார்ப்பும் நண்பனுக்கும் இருந்தது. அதனால் திட்டமிட்டபடியே 30 நிமிடங்களுக்கு முன்னதாகவே மாஸ்டர் சிவலிங்கம் அவர்களின் வீட்டுக்கு முன் வந்துவிட்டோம். இருந்தும் குறித்த நேரத்திற்கு முன் வீட்டினுள் செல்வதில் எம் இருவருக்குமே உடன்பாடு இருக்கவில்லை. 82 வயதான மாஸ்டர் சிவலிங்கம் ஐயாவின் தூக்கத்தைக் கலைப்பதில் அப்படி என்ன விருப்பம் எங்களுக்கு?

மாஸ்டர் சிவலிங்கம் ஐயாவின் பிறப்பிடம் என்னமோ மஞ்சந்தொடுவாய் ஆக இருந்தாலும் வசிப்பிடம் கல்லடிதான். ஆதலால் அந்த 30 நிமிடங்களையும் கழிப்பதென்பது எமக்கொன்றும் சிரமமாகத் தெரியவில்லை. கல்லடிப் பாலத்தின் அருகிலுள்ள இருக்கைகளில் அமர்ந்து மாமாவிடம் கேட்கும் வினாக்களைத் தயார் படுத்தினோம். அப்போது சற்று மழைத்தூறல். அந்த மழைத் துளியை பாலத்தின் அருகிலிருந்த மீன் சிற்பம் பருகும் அற்புதக் காட்சியை இரசிக்கக் கூட நேரம் எமக்கு இடங்கொடுக்கவில்லை. தூறலுக்கு மத்தியிலும் தாமதிக்கக் கூடாதென்ற நோக்கிலும் மாஸ்டர் சிவலிங்கம் அவர்களின் வீட்டு நுழைவாயிலை நாம் அடையும்போது நேரம் சரியாக 4 மணி. ஆனால் நுழைவாயில் பூட்டித்தான் இருந்தது. நோட்டம் விட்டதில் வீட்டுக் கதவு திறந்திருந்த விடயம் கண்களோடு உறவாடிற்று. ஐயாவை அழைத்தோம். திறந்திருந்த கதவருகில் தூங்கிக் கொண்டிருந்த மாமா எழும்பிய வேகமும் பார்த்த கம்பீரப் பார்வையும் எம்மை ஒரு கணம் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அதே வேகத்தில் தூறல் மழைக்குள்ளும் மாமா ஓடிவந்து கேற்றைத் திறப்பார் என நான் சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை.

வீட்டினுள் சென்ற எங்களை மாஸ்டர் பெற்ற விருதுகளும் நினைவுச் சின்னங்களும் மட்டுமே அடுக்கப்பெற்ற அலுமாரி அன்புடன் வரவேற்றது மட்டுமன்றி, அதற்குள் இருந்த சில புகைப்படங்கள் மாமாவின்;



இளமை நினைவுகளை எங்களுடன் பகிர்ந்து கொண்டன.

வீட்டினுள் சென்ற எங்களை மாஸ்டர் பெற்ற விருதுகளும் நினைவுச் சின்னங்களும் மட்டுமே அடுக்கப்பெற்ற அலுமாரி அன்புடன் வரவேற்றது மட்டுமன்றி, அதற்குள் இருந்த சில புகைப்படங்கள் மாமாவின்; இளமை நினைவுகளை எங்களுடன் பகிர்ந்து கொண்டன.

அந்த அலுமாரி ரூபா ஏழாயிரம் செலவில் மனைவியால் செய்யப்பட்டதென்பதை அவரின் மனைவி மங்கையற்கரசி அம்மணியிடமிருந்து கதைத்ததில் தெரிந்துகொண்டோம். அவர் பண்டிதர் பூபாலப்பிள்ளையின் மகள். கலையை நேசிக்கும் இயல்பும் ஒரு கலைஞனை உணர்ந்துகொள்ளும் மனமும் அவரிடம் இயல்பாகவே காணப்பட்டது. இப்படியான ஒரு வாழ்க்கைத்துணைநலம் எல்லாக் கலைஞனுக்கும் இலகுவில் வாய்த்;து விடுவதில்லை. இவ்வாறு வாய்க்கப்பெற்ற கலைஞர்கள் இலகுவில் ஓய்ந்து விடுவதுமில்லை. இவர் கதைகூறுவதை நிறுத்த வேண்டும் என வைத்திய நிபுணர்கள் ஆலோசனை வழங்கியிருந்தும், ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் மட்டக்களப்பு இராமகிருஸ்ண மிஷனில் சிறுவர்களுக்கும் பெரியோர்களுக்கும் மகாபாரதம், இராமாயணம் போன்ற இதிகாசக் கதைகளை இப்போதும் கூறிவருகின்றார். இருந்தும் நீங்கள் இழந்துவிட்;ட விடயம் என்ன என்ற எனது கேள்விக்கு முன்னர் போல் இப்போது என்னால் கதை கூற முடியவில்லை என வருத்தப்படுகின்றேன் எனக் கூறியபோது கதைகூறுவதில் அவருக்குள்ள ஆர்வமும் அக்கறையும் புலப்பட்டது. அவருடன் உரையாடிய அந்த இரண்டரை மணி நேர இடைவெளிகளுக்குள் கதைகூறல், நடிப்பு என்பன அவர் இரத்தத்தில் ஊறிவிட்ட ஒன்றாகவே என்னால் உணரமுடிந்தது. அதை எந்த நோய்களாலும் முதுமையினாலும் இலகுவில் அவரிடமிருந்து பிரித்துவிட முடியாது.


அவரின் பயங்கர இரவு கதைப் புத்தகத்தில் நான் சிறுவயதில் வாசித்துப் பயந்த கதைகளின் காட்சிகளையும் நினைவுபடுத்தி என்னை அவரின் ஒரு தீவிர இரசிகனாகவே முதலில் அறிமுகம் செய்து கொண்டேன். அதைக் கேட்டதும் ஒரு சின்னப் புன்முறுவல் அவர் முகத்தில் இழையோடியமை என்னையும் மகிழ்வித்தது. தொடர்ந்து அவரிடம், டயரியில் விரல்களால் எழுப்பும் குதிரைச் சத்தத்தை நான் சிலாகித்ததையும் பகிர்ந்து கொண்டு, பின்னர் எனக்காக ஒருமுறை அதனைச் செய்து காட்டுமாறு கேட்பேன் எனக் கூறிய மறுகணமே எழும்பி அவரின் அறைக்குள் சென்றுவிட்டார். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. சற்றுநேரத்தில் ஒரு டயரியும்; கையுமாக என்முன் தோன்றி இராஜகுமாரன் குதிரையில் வருகிறான். எனத் தொடங்கி, முன்னர் நான் சிறுவயதில் கேட்ட அதே கதையின் சிறு பகுதியை கூறிக் காட்டினார். முன்னர் இருந்த அதே உற்சாகம், அதே குரல், அதே கம்பீரம் என்னை ஒருநிமிடம் மலைக்க வைத்தது மட்டுமன்றி என்னை அது மீண்டும் சிறுவனாகவே மாற்றியிருந்தது. எனக்காக அவர் செய்து காட்டிய அத்தருணங்களை எனது பாக்கியமாகவே கருதுகிறேன்.

முன்னரெல்லாம் பாடசாலைகளில் வாரத்தில் ஏதாவது ஒரு நாளில் ; மாணவர் மன்றம் நடக்கும் அதிலே மாணவர்கள் தங்களது திறமைகளை வெளிக்காட்டுவார்கள். பின்னர் அது மாதமொருமுறை நடந்து வந்தது. தற்போது அது அறவே இல்லாமல் போய்விட்டது. இந்த இடத்தில் இது எதற்கு என நீங்கள் கேட்பது புரிகிறது. மாஸ்டர் சிவலிங்கமும் அப்படியொரு மாணவர் மன்றம் எமக்களித்த பொக்கிஷந்தான். சிவானந்த வித்தியாலயத்திலே அவர் படிக்கும்போது நடந்த மாணவர்மன்றம் ஒன்றில்தான் அவர் முதலாவதாகக் கதை சொல்லியிருக்கிறார். அதைக் கேட்டுக்கொண்டிருந்த புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை மட்டக்களப்பு அரசினர் கல்லூரியிலும் (தற்போது இந்துக்கல்லூரி) கதை கூறுமாறு கேட்டிருக்கிறார். அதன்பின் வின்சன் பாடசாலை என இவர் மாணவனாய் இருந்த காலத்திலேயே பிற பாடசாலைகளுக்குச் சென்று கதைகூறியிருக்கிறார் என்பதைப் பார்க்கும் போது அவரின் கதைகூறும் ஆற்றல்பற்றி மேலும் நான் உங்களுக்கு விபரிக்கவேண்டியிருக்காது. அப்போது அருகிலிருந்த அவரின் மனைவி குறுக்கிட்டு நாங்கள் வின்சன்ட் பாடசாலையில் படிக்கும்போது இவர் வந்து கதை சொன்னவர் நல்ல ஞாபகம் இருக்கு' என்ற அவரிடம் அப்போ உங்கள் திருமணம் காதல் திருமணமா?' என்ற எனது கேள்விக்கு சிரித்துக்கொண்டே எல்லாரும் இப்படித்தான் கேட்பார்கள்' என்ற அவரின் பதிலிலிருந்தே பேசிய திருமணம் என்பதைப் புரிந்து கொண்டேன்.

மாமாவை நேர்காணச் செல்லும் முன் அவர்பற்றிய விடயங்களைத் தேடிக் கொண்டேன். அதிலே எந்த இடத்திலும் அவர் கல்வி கற்பித்த தகவல்கள் இல்லை. ஆனாலும் மாஸ்டர் என எப்படிப் பெயர் வந்தது என்ற வினா என்னுள் எழுந்தது. அதைக் அவரிடமே கேட்டபோதுதான் அவர்குடும்பத்தில் அப்பா, அண்ணா என எல்லோரும் மாஸ்டராயிருந்தவர்கள் என்பதும் அதனாலேயே அவருக்கும் சிறுவயதிலிருந்தே செல்லமாக அந்தப் பட்டம் ஒட்டிக் கொண்டதையும் தெரிந்து கொண்டேன்.

குடும்பத்தில் எல்லோரும் ஆசிரியர்கள் என்பதால் வேறு துறையான பத்திரிகைத் துறையைத் தேர்ந்தெடுத்ததாகவும் கூறிய அவரிடம் பத்திரிகைத்துறையில் உங்களது செயற்பாடுகள் பற்றிச் சொல்லுமாறு கூறிய போதுதான் அனேகம் பேருக்குத் தெரியாத மாஸ்டரின் இன்னுமொரு ஆளுமை வெளிப்பட்டது. தினபதி பத்திரிக்கையில் இளைஞர் மன்றம் எனும் பகுதிக்குப் பொறுப்பாகவும் சோமண்ணே சொல்லுகிறார் எனும் பகுதியும், சிந்தாமணி பத்திரிகையில் சிறுவர் சிந்தாமணிக்குப் பொறுப்பாகவும் இருந்தமை மட்டுமன்றி அவ்விரு பத்திரிகைகளில் துணையாசிரியராகவும் பணியாற்றியிருக்கிறார். அதுமட்டுமல்லாமல் சுதந்திரன் பத்திரிகையில் கேலிச்சித்திரமும் வீரகேசரியில் சிறுவர் பகுதிக்கான ஓவியமும் வரைந்திருக்கிறார்.


இது பற்றிய உரையாடலுக்கு மத்தியில் மாஸ்டரின் மனைவியால் பரிமாறப்பெற்ற சுவையான ரீயும் விஸ்கட்டும் எங்களுக்கான கட்டாய ஓய்வைக் கட்டவிழ்த்துவிட்டது. நாங்கள் ரீ பருகிக்கொண்டிருந்த வேளை சிவலிங்க மாமா பற்றி அவர் மனைவியிடம் வினாத்தொடுத்தோம். அவர் ஆசையில்லாதவர்...அவருக்குப்பின்னால் போனால் எதிலும் வெற்றிதான். சீதனமாகக் கொடுத்த வீட்டைக் கூட வாங்க மறுத்தவர் எனத் தொடங்கிய அவர் தம் வாழ்க்கைப் புத்தகத்தின் முதற்பக்கங்களை எங்களுக்காக மீண்டும் புரட்டத் தொடங்கினார். புதிதாகத் திருமணபந்தத்தில் இணையும் மாப்பிள்ளைக்கு பெண்வீட்டார் ஆறு மாதங்களுக்கு விருந்து வைப்பது கிழக்குமாகாணப் பாரம்பரியத்தின் ஒரு அங்கம். இவருக்கும் எங்கள் வீட்டில் விருந்து வைத்தார்கள். இரவு உணவு என்பதால் அரிசிமாப் பிட்



டுடன் பலவகையான கறிகளும் தயார் படுத்தியிருந்தனர். எல்லோரும் சாப்பிட ஆரம்பிக்கும் வேளை இவர் தான் இருந்த கதிரையில் தாளம் போட்டு மாப்பிள்ளை அரிசிமாப் பிட்டு சாப்பிடுவதில்லையே.. எனப் பாடல் பாடிக் கொண்டிருந்தார்;. பின்னர் அவருக்கு இடியப்பம் செய்து கொடுத்தோம் எனக் கூறும்போது நிச்சயமாக அக்காலத்தின் விளிம்பில் அவர் சென்று திரும்பியிருக்க வேண்டும். பசுமை நினைவுகளை அவர் மீட்டிய விதம் அக் காட்சிகளை எம் மனத்திரைக்குக் கொண்டு வந்தது. தனது தந்தை அவருக்கு கூறிய தூதுளங் கீரை தீதுளதகற்றும் என்ற வசனத்தையும் அவர் எம்முடன் பகிர்ந்து கொண்டமை பயனுள்ளதாய் இருந்தது. இது போன்றே ஒரு மழைநாள் வீதியில் தள்ளுவண்டி தள்ளி வேலைசெய்யும் ஒருவர்மேல் இரக்கப்பட்டு பாவம் அவருக்கு ஒரு ரீ கொடுப்போமா என சமயலறைக்கு வந்து மாஸ்டர் தன்னிடம் கேட்டு அவரை அழைத்து ரீ பருகக் கொடுத்ததைப் பெருமையாக நினைவுகூர்ந்தார். எங்களுக்கும் அவர் மேல் இருந்த மதிப்பும் மரியாதையும் இன்னும் சற்று அதிகமானது.

அப்போ இலேசாகத் தூறிக் கொண்டிருந்த மழை நாங்கள் வெளியில் செல்வதற்காக மெல்ல ஒதுங்கிக் கொண்டது. மாமாவின் வீட்டின் அருகில் உள்ள மாமரமும் பூச்செடிகளும் எங்கள் வருகையை


மிகுதி 12 ஆம் பக்கம் பார்க்க...



# வானொலிமாமா மாஸ்டர் சிவலிங்கம் ஐயாவுடன் ஒரு சந்திப்பு

எதிர்பார்த்தவண்ணமிருந்தன. மனைவியிடம் கேட்டது போன்றே மாஸ்டரிடமும் உங்களின் மனைவியிடம் உங்களுக்கு பிடித்தது என்ன? எனக் கேட்டுக்கொண்டே வீட்டின் முன்னிருந்த சிறிய தோட்டத்திற்குச் சென்று எமது உரையாடலைத் தொடர்ந்தோம். எதையும் துணிஞ்சு செய்வா என்ற பதில் கணநொடிக்குள் மாமாவிடம் இருந்து எனது குறிப்பேட்டினுள்ளும், மாமாவின் கம்பீரத்தோற்றம் எனது கமராவுக்குள்ளும் புகுந்து கொண்டன.

இதன்போது மாமா இந்தியாவில் சந்தனு கலைக்கல்லூரியில் ஓவியம் பயின்றமையும் அங்கு தங்கியிருந்த காலத்தில் அவரின் பக்கத்துவீட்டில் இருந்த தெலுங்கு நடிகை ஒருவருக்கு தமிழ் சொல்லிக்கொடுத்ததையும் அந்த நடிகைமூலம் மாமாவுக்கு திரையுலகில் இணிட்டிஞி செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்தமையும் அதை மிகச்சந்தோசத்தோடு அக்கலைக்கல்லூரியின் அதிபர் ஓவியர் சந்தனு மாஸ்டரிடம் கூறியபோது, அதற்கு சினிமாத் துறைமேல் கொஞ்சமும் உடன்பாடில்லாத சந்தனு மாஸ்டரிடமிருந்து சற்றும் எதிர்பார்க்காத என்ன சினிமா மோகம் பிடிச்சிட்டுதோ! அப்போ உனக்கு இனி ஓவியம் சரிவராது என்ற பதிலையும் அதற்காக தனக்குக் கிடைத்த பரிசான 2 வாரங்கள் இடைநிறுத்தம் பற்றியும் மிகச்சுவாரஷ்யமாகப் பேசிக்கொண்டிருந்த மாமா, அந்நேரத்தில் தனது அம்மாவுக்கு மிகவும் சுகவீனம் ஏற்பட்டதாக தனது அண்ணாவிடமிருந்து வந்த தந்தி பற்றிக் கூறியபோது எமக்கும் சற்று வருத்தமாகத்தான் இருந்தது. அப்போது மாமாவின் உடல் மட்டும்தான் இந்தியாவில் இருந்திருக்கும் என்று நம்புகின்றேன் இவரின் எண்ணங்கள் எல்லாம் தனது அம்மா பற்றித்தான் சுழன்றிருக்கவேண்டும். உடனடியாக அம்மாவைப் பார்க்க மாமா தனது வீட்டுக்கு வந்தபோது, தன் அம்மாவே வந்து கதவைத் திறந்தார் அப்போது மாமாவுக்குச் சந்தோசம் ஒரு பக்கம், ஏன் இப்படி தந்தி வந்தது என்ற சந்தேகம் ஒருபக்கம். மாமா



வைப்போல், உங்களைப்போல் எனக்கும் அதே கேள்விதான். ஆனாலும் மாமாவிடம் நான் அந்த வினாவை அச்சந்தர்ப்பத்தில் கேட்டிருக்கவில்லை.

மாமா தொடர்ந்தார் தம் வீட்டிலுள்ளோர் வருக! வருக! சினிமா நடிகரே! என வரவேற்ற போதுதான் சந்தனு மாஸ்டர் அனுப்பிய உங்கள் மகனுக்கு சினிமா மோகம் வந்து விட்டது. அவன் இங்கே இனிப் படிக்கமாட்டான், யாரையாவது ஒரு சினிமாக்காரியைக் கட்டி இங்கேயே இருந்துவிடுவான், எப்படியாவது அவனை நாட்டுக்கு அழையுங்கள் என்ற தொலைமடல் பற்றிய செய்தி தெரியவந்தது மாமாவுக்கு. உங்களைப்போன்றே நானும் இந்திய சினிமா ஒரு திறமைமிக்க, ஆளுமைமிக்க ஒரு கலைஞனை இழந்துவிட்டது என மனதுக்குள் நினைத்துக்கொண்டே என் உரையாடலைத் தொடர்ந்தேன்.

அந் நேரத்தில் மாமாவின் இந்திய அனுபவங்கள் பற்றியே எமது உரையாடல் நகர்ந்து கொண்டிருந்தது. அதன்போது நடிகர் திலகம் சிவாஜி யிடமே அவரின் மனோகரா திரைப்படக் காட்சியின் ஒரு பகுதியை நடித்துக்காட்டி தான் பாராட்டுப் பெற்றதையும் அவருடன் புகைப்படம் எடுத்துக்கொண்டதைப் பற்றியும் மிக மகிழ்ச்சியாக எம்மிடம் பகிர்ந்து கொண்ட மாமாவிடம் நீங்கள் உங்களுக்குப் பின்னர் ஒரு கதைசொல்லியை உருவாக்க வில்லையே? என்ற எனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியபோது.. கலை இன்னொருவர் சொல்லிக் கொடுத்து வருவதில்லை இயல்பாக



ஆற்றல் இருந்தால் மட்டுமே கலைஞனாகலாம் என்ற மாமாவின் பதிலுடன் எனக்கும் உடன்பாடு இருந்தது. இதனால் அது பற்றிய மேலதிக வினாக்களுக்கு அங்கு இடமிருக்கவில்லை என்பதால் நீங்கள் இப்படியெல்லாம் வருவீர்கள் என சிறுவயதில் எப்போதாவது நினைத்துப்பார்த்ததுண்டா? என்ற எனது அடுத்த கேள்விக்கு, மாமா தான் சின்ன வயதில் காகம், குருவி, நாய், பூனை, போன்றும் வீட்டுக்குப் பிச்சைக் காரர்கள் வரும்வேளை அவர்கள் போன்றும் நடித்துக்காட்டுவது பற்றி தனது அம்மா கூறியதையும் அவ் வேளைகளில் நீ ஒரு தெனாலிராமனாகத்தான் வருவாய் என தனது அப்பா கூறியதையும் ஞாபகப்படுத்திக் கொண்ட போது தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை என்ற ஔவையின் வரிகள் என் மனச்சுவரின் எங்கோ ஓர் மூலையில் கிடந்து முன்வந்து மறைந்தது.

தாமி எனத் தமிழில் வழங்கப் பெறும் செல்ஃபி மோகம் தற்போது எல்லோரையும் தன்வசப்படுத்தியிருக்கிறது. மாமாவுடன் பேசிக்கொண்டிருந்த போது என்னுள்ளும் அதன் தாக்கம் சற்றுத் தன் வேலையைக் காட்டத் தொடங்கிற்று. செல்ஃபி பற்றி மாமாவுக்குள்ள அறிமுகத்தினையும் இதுவரை என்னைப்போன்றே மாமாவும் செல்ஃபிக்குப் புதியவர் எனவும் அறிந்துகொண்டேன். எனக்கும் மாமாவுக்கும் அது ஒரு புதிய அனுபவம். மாமாவுடன் செல்ஃபி எடுக்கும் முதலாவது நபர் நீதான் எடுத்துக்கொள் என்றது கைத்தோலைபேசி. எனக்கும் அது பெருமையாகத்தான் இருந்தது. இனி அந்த வாய்ப்பு யாருக்கும் வாய்க்கப்போவதில்லை.

1960 இல் கல்லடி உப்போடையில் நடந்த நமக்கு மேலே ஒருவன்டா எனும் மாமாவின் முதலாவது வில்லுப்பாட்டு நிகழ்வோடு ஆரம்பித்து இங்கிலாந்து ஆக் ஈகு அமைப்பின் 10 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடைபெற்ற விழாவில் விண்ணுலகத்தில் விபுலாநந்தர் எனும் வில்லுப்பாட்டின் இடையே மட்டக்களப்பு பற்றிய பாடலைத் தான் பாடியபோது எல்லோரும் எழுந்து நின்று கரகோசம் வழங்கியவேளை தனக்கு ஏற்பட்ட மெய்சிலிர்த்த சம்பவம் வரை எம் உரையாடல் மிக இனிய நினைவுகளுடன் பரந்தது.

அதிலிருந்து நாடகம் பற்றித் திரும்பிய எமது உரையாடல் மட்டக்களப்பில் அப்போதிருந்த நாடக வரலாற்றையும் நாம் இப்போது இழந்துவிட்ட கலைகளையும் கலைஞர்களையும் ஞாபகப்படுத்த மறக்கவில்லை. இதன்போது யமலோகத்தில் வீசு கதிர்காமத்தம்பி , சுடுசாம்பலாப் போச்சு போடியாரே, நாஸ்த்திகன் நல்லதம்பி போன்ற தான் எழுதி இயக்கி நடித்த நாடகங்கள் பற்றியும் அதில் வீர வசனம் பேசவேண்டிய இடத்தில் கத்தி உடைந்து பிடி மட்டும் எஞ்சியிருந்தபோது சமயோசிதமாக உன்னை வீழ்த்த கத்தி தேவையில்லை. இந்தப் பிடியே போதும் என தான் பேசிய வசனங்களைப் பேசிக் காட்டியவேளைகளில் மாமாவை ஒரு நடமாடும் திரையரங்காகவே உணரமுடிந்தது. இரண்டு பாத்திரங்களின் கதைவசனங்களைப் பேசி நடித்துக் காட்டும் சந்தர்ப்பங்களில் குரல் , தொனி, செய்கை எனத் தான் உண்மையாகவே இரு வேறு நபர்களாக மாறியிருந்தார்.

மாமா கதை சொல்லும் சந்தர்ப்பங்களில் தமிழ் மொழி தொரியாத சிங்கள இளைஞர்கள் கூட இவரின் அங்க அசைவுகளையும் மாமா எழுப்பும் ஒலிகளையும் இரசிப்பதற்காகவே கூடுவதையும், பாடசாலைக்கு வராத பிள்ளைகளை வரவைப்பதற்காக மாமாவை பாடசாலைகளில் கதைசொல்லவைத்து அதிபர்கள் பிள்ளைகளை பாடசாலைக்கு வரவைப்பதையும் பலர் சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஒரு மனிதனுக்குள் இத்தனை ஆளுமைகளா? வியந்து போனேன். இப்படியொரு கலைஞனைக் கருக்கொள்ள இனி செல்லத்தங்கம் அம்மாவுக்குப் பின் எந்தவொரு தாய்கும் இயலப்போவதில்லை.

இத்தனை திறமைகளுக்குள்ளும் மாமா கதைசொல்வதையே தனது பிரதான அங்கமாகக் கொண்டிருப்பது பற்றி வினாவியபோது ஏதாவது ஒரு துறையை உங்களுக்காகத் தேர்ந்தெடுங்கள் என்றோ ஒருநாள் அதில் நிச்சம் நீங்கள் வெற்றி பெறுவீர்கள் என்ற மாமாவின் பதில் என்னையும் சிந்திக்க வைக்கத் தவறவில்லை.

ஒரு சிறந்த இரசிகனாலேயே நிச்சயமாக ஒரு சிறந்த கலைஞனாக இருக்க முடியும் என்பது எனது கருத்து. அதனால், நீங்கள் இரசித்துப் பார்க்கும் நகைச்சுவை நடிகர்கள் பற்றிய எனது கேள்விக்கு தங்கவேலு, கிருஷ்ணமதுரம் எனக்கூறி தற்போது நகைச் சுவைகள் சிரிப்பதற்கு மட்டுமே பயன்படுத்தப்படுவதாகவும் அப்போதைய நகைச்சுவைகள் மக்களை சிந்திக்கவும் வைப்பதாகவும் தற்போதைய நகைச்சுவைகளுக்கும் அப்போதைய நகைச்சுவைகளுக்கும் உள்ள வேறுபாடுகளையும் அந்தக் காலத்து இலக்கியங்கள் கருத்தாளம் மிக்கதாகவும் இப்போதுள்ளவை அவ்வாறில்லை என்ற தனது ஆதங்கங்களையும் வெளிப்படுத்தியபோது சமூக அக்கறையுள்ள கலைஞனை அவரில் கண்டேன். தற்போதைய கலைஞர்களுக்கு நீங்கள் கூறவிரும்பும் செய்தி என்ன என்ற வழமையான கேள்விக்கு இதுதான் பொருத்தமான நேரம் எனக்கருதிக் கேட்டபோது நகைச்சுவையோடு ஒரு நல்ல அறிவுரையையும் மக்களுக்குக் கொடுக்கவேண்டும் என அவர் கூறிய பதில் இதை வாசிக்கும் ஏதாவது ஒரு கலைஞனைப் பாதித்திருந்தால் அதனையே எனது எழுத்துக்குக் கிடைத்த வெற்றியாகக் கருதுவேன்.உங்களுக்கு ஒரு விடயம் தெரியுமா? மாமாவுக்கு மிகவும் பிடித்த உணவு எதுவென்று? இது அவரிடம் எனது நிறைவுக் கேள்வி. அவர் அதற்குப் பாயாசந்தான் எனக் கூறிய விதம் என் நாக்கில் இனிப்பை உண்டுபண்ணியது.

அதே இனிப்போடும் நிறைந்த மகிழ்வோடும் அங்கிருந்தும் அவர்கள் இருவரிடமிருந்தும் விடைபெறும் நேரம் மாமாவிற்கான அடுத்த வேலை தயாராக இருந்தது. மாகாணமட்டக் கதைகூறல் போட்டிக்காக பாடசாலை மாணவியொருவருக்குப் பயிற்சியளிப்பதே அது. அதன்போதும் எங்களுடன் உரையாடிய அதே ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் தனது அடுத்த தலைமுறைக்கான ஊடுகடத்தலை ஆரம்பித்திருந்த மாமாவிடமிருந்து விடைபெற்றாலும் வீதியெங்கும் அவரின் பசுமை நினைவுகளுடனேயே பயணித்துக் கொண்டிருக்கிறது இந்த மனது.

நன்றி: முதுசொம்.கொம்



இலங்கை தினசரி மற்றும் வாரந்த பத்திரிகைகளை உங்கள் மொபைலில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்

Viber இல் இணைய இங்கே CLICK செய்யுங்கள்

Viber




இக் குழுமத்தில் இணைவதனால் மற்றவர்கள் உங்கள் தொலைபேசி இலக்கத்தை பார்வையிட முடியாது

CLICK

